بسم الله الرحمن الرحيم

எல்லாப் புகழும் இறைவனுக்கே. சாந்தியும் கருணையும், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

இச் சிற்றேட்டிலுள்ளவைகள் ஏகத்துவ அறிவுக்கலையிலே உண்டான வினாக்களும் விடைகளுமாகும். இவைகளை நான் அல்குர்ஆன், அஸ் ஸுன்னாஹ், சிறந்த அறிஞர்களின் அறிவுரைகள், போன்றவற்றிலிருந்து தொகுத்திருக்கின்றேன். இவைகளை தொகுப்பதற்கு முக்கிய காரணம், ரியாத் நகரில் சிபா என்ற ஊரில் அமைந்திருக்கும் அழைப்பு வழிகாட்டி மையத்தில் உள்ள சகோதரர்கள், புதிதாக இஸ்லாத்தை தழுவும் சகோதர சகோதரிகளுக்கோர் பாடத் திட்டமாக அமையும் வகையில் ஒரு புத்தகத்தை தொகுத்துத் தருமாறு வேண்டினார்கள். அதற்கினங்கவே நான் இதனை அவர்களுக்கேற்ற வகையில் தொகுத்திருக்கின்றேன். எனவே அல்லாஹ் அதற்குரிய நன்மையைத் தந்து, அதனை நல்லமல்களில் சேர்த்து, மறுமையில் நன்மைத் தட்டு கனத்திருக்கவும், எனது பெற்றோர்களதும், முஃமீன்களதும், பாவங்களை மன்னித்து அருள் புரியவும் அல்லாவை வேண்டுகின்றேன்.

ஆக்கியோன் கலாநிதி.
இப்ராஹீம் சாலிஹ் அல் ஹுலய்ரீ.

# ஏகத்துவ கொள்கை விளக்கம்.

***வினா.*** அல்லாஹ் மனிதர்களைப் படைத்ததன் நோக்கம் யாது?

***விடை.*** அவனுக்கு செய்ய வேண்டிய வணக்கங்களை, அவனுக்கு மாத்திரமே செய்து வழிப்படுவதற்காகும். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே அன்றி, நான் படைக்கவில்லை. (51,56)

***வினா.*** இஸ்லாத்தையும், அதன் முக்கிய அம்சங்களையும் கூறுக?

***விடை.*** இஸ்லாம் என்பது அல்லாஹ் தனது இருதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கற்றுக் கொடுத்து, அதன் பிரகாரம் அவரது வாழ்க்கையை அமைத்து, ஏனைய மனிதர் களையும் அதன் பால் அழைக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்திய ஒரு இறை வழிகாட்டலாகும். அதன் சிறப்பம்சங் களில் சில பின்வருமாறு.

- ***அது அல்லாஹ்விடமிருந்து வந்தது.*** அல்லாஹ் கூறுகின்றான். பின்பு உங்களுக்கு நாம் ஓர் மார்க்கத்தை அமைத்துத் தந்தோம், எனவே நீங்கள் அதனை பின் பற்றுவீர்களாக, அறிவில்லாதவர்கள் செய்து கொண்டி ருக்கும் மனோ இச்சைகளை, நீங்கள் பின்பற்ற வேண் டாம். அல்லாஹ் தனது அடியார்களின் விடயங்களைப் பற்றி தெளிவானவனாகவும், அவர்களை சீர்திருத்துவ தில் தேர்ச்சியுள்ளவனாகவுமிருக்கின்றான்.(45,18)
- ***அது பூ ரணமான மார்க்கம்.*** அல்லாஹ் கூறுகின் றான். இன்றைய தினம் உங்களுக்காக

உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி வைத்து விட்டேன். என்னுடைய அருட் கொடையை உங்களின் மீது முழுமை யாக்கி விட்டேன். இன்னும் உங்களுடைய இஸ் லாத்தை மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன். (5,3) மேலும் கூறுகிறான். இன்னும் உங்கள் இரட்சகன் மறதியானவனாக இல்லை.(19,64) இந்த இஸ்லாம் உலக வாழ்க்கையில், மனிதனுக்கு தேவையான அனைத்தையும் உள்ளடக்கியிருப்பதுடன், ஈருலக வாழ்க்கைகளின் பாக்கியங்களும் அதில் பொதிந்திருக் கின்றது.

- ***இம் மார்க்கம் எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமானதாகும்.***
- ***மனித சமுதாயத்துக்கு பூ ரண பாதுகாப்பைக் கொடுக்கின்றது.*** ஒரு மனிதன் இஸ்லாத்தை சிறப் பாக கற்கும் போது, அவன் அதனை மதித்து, அதனை முழுமையாக பின்பற்ற ஆசை கொள்கின்றான். மேலும் அல்லாஹ்வின் அருளைப் பெற்று சிறந்ததோர் வாழ்க் கையையும் அமைத்துக் கொள்கின்றான். இதன் மூலம் மன அமைதியும், சமூகப் பாதுகாப்பும், நரகப் பாது காப்பும், பெற்றவனாக காணப்படுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வை தியானிப்பதின் மூலம் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன. (13,28) மேலும் கூறு கின்றான். சிந்தனையுள்ளவர்களே! பழிக்குப்பழி வாங்கு வதில் உங்களுக்கு நிம்மதியான வாழ்வு இருக்கின்றது. (அவ்வாறு பழிக்குப்பழி வாங்குவதின் மூலம்) நீங்கள் அல்லாஹ்வை பயப்படப் போதும். (2,179) மேலும் கூறு கின்றான். ஈமான் கொண்டு, அவர்களின் ஈமானுடன்

சேர்த்து இணை வைக்காமலிருப்பவர்கள் தான், பாது காப்புப் பெற்றவர்கள். இன்னும் அவர்கள் தான் நேர்வழி பெற்றவர்களுமாவர்.(6,82)

- ***நிலையான நற்பாக்கியத்தைக் கொடுக்கின்றது.*** மனித இனம் இன்று நற்பாக்கியத்தையும், சிறந்த வாழ்க் கையையும் தேடி அலைந்து கொண்டிருக்கின்றது. அதனை இந்த இஸ்லாம் மார்க்கம் மாத்திரமே வழங்கு கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் நற்பாக்கிய மடைந்து விட்டனரே அத்தகையோர், வானங்கள் மற்றும் பூமி நிலைத்திருக்கும் காலமெல்லாம் சுவனபதியில் நுழைந்து நிரந்தரமாக இருப்பார்கள். (11,108)

***வினா.*** ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய நான்கு விடயங்களைக் கூறுக?

***விடை.*** அவையாவன

1. அல்லாஹ்வையும், அவனது தூதரையும், இஸ்லாத் தையும், ஆதாரங்களுடன் அறிந்து கொள்ளல்.
2. அறிந்தவைகளை கொண்டு நடைமுறைப்படுத்தல்.
3. அதன் பக்கம் மக்களை அழைத்தல்.
4. அவ்வாறு அழைக்கும் போது ஏற்படும் பிரச்சினை களுக்கு முகம் கொடுத்தல்.

***வினா.*** மேற் கூறப்பட்டவைகளுக்குரிய ஆதாரத்தைக் கூறுக?

***விடை.*** அல்லாஹ் கூறுகின்றான். காலத்தின் மீது சத்திய மாக. நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். விசு வாசங் கொண்டு, நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை

ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (பாவங்களை விடு வதிலும், நன்மைகளைச் செய்வதிலும், ஏற்படும் கஷ்டங் களைச் சகித்து) பொறுமையைக் கொண்டும், ஒருவருக் கொருவர் உபதேசிக்கின்றார்களோ, அத்தகையோரைத் தவிர. (103.1,3)

***வினா.*** அல்லாஹ் நம்மை படைத்த நோக்கம் யாது?

***விடை.*** அல்லாஹ் எங்களைப்படைத்து, உணவளித்து, நேர் வழி காட்டுவதற்கு ஒரு தூதரையும் அனுப்பி அவருக்கு வழிப்படுமாறு பணித்திருக்கின்றான். யார் அத்தூதருக்கு வழிப்படுகின்றாரோ, அவர் சுவனம் நுழைவார். யார் மாறு செய்கின்றாரோ, அவர் நரகம் நுழைவார். அல்லாஹ் கூறு கின்றான். உங்கள் மீது சாட்சியாளராக ஒரு தூதரை உங்க ளிடம் நிச்சயமாக நாம் அனுப்பி வைத்தோம்.(73,15) மேலும் கூறுகின்றான். உங்களை நாம் படைத்ததெல்லாம் வீணுக் காகத்தான் என்றும், நிச்சயமாக நீங்கள் நம்மிடம் மீட்டப் படமாட்டீர்கள். என்றும் நீங்கள் எண்ணிக் கொண்டிருந் தீர்களா?.(23,115)

***வினா.*** அல்லாஹ்வுக்கு இணை வைப்பதின் சட்டம் யாது?

***விடை.*** இணை வைப்பதை அல்லாஹ் ஒரு போதும் விரும்ப மாட்டான். அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் தன் அடியார் களிடத்தில் நிராகரிப்பை அவன் பொருந்திக் கொள்வ தில்லை. (39,7) மேலும் கூறுகின்றான். நிச்சயமாக பள்ளிகள் அல்லாஹ்வி(ன் வணக்கத்தி)ற்கே உரியன. ஆகவே (அவை களில்) அல்லாஹ்வுடன் மற்றெவரையும், நீங்கள் (பிரார்த் தித்து) அழைக்க வேண்டாம்.(72,28) இவ்வாறு அவன் தடுப் பதெல்லாம் அவனது பொருத்தமின்மையை எமக்கு தெளிவுபடுத்துகின்றது.

***வினா.*** இன்று காணப்படும் சில இணைகளைக் கூறுக?

***விடை.*** இணைகளிலுள்ளவையாக, கப்ருகளை வலம் வருதல், அல்லாஹ் அல்லாதவருக்கு அறுத்துப் பழியிடல், இஸ்லாத்தையும், இஸ்லாமியர்களையும் பரிகசித்தல், போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

***வினா.*** காபிர்களுடன் முஸ்லிம்களின் நடவடிக்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும்.

***விடை.*** முதலாவதாக அவர்களுக்கு நேர்வழியையும், நலவையும் விரும்பி, அதன் பக்கம் அழைக்க வேண்டும். மேலும் அவர்கள் எங்களை எதிர்த்துத் தாக்காமல் சமாதான முறையில் நடந்து கொண்டால், அவ்வாறே அவர்களை விட்டு விட வேண்டும். மேலும் அவர்கள் இருக்கும் மார்க்கத்தை வெறுத்து, அவர்களின் விழாக்களில் கலந்து கொள்ளாமலும், அதையிட்டு அவர்களை வாழ்த்தாமலும், அவர்கள் உண்மையான மார்க்கத்தில் இல்லையென்பதனையும், வெளிப்படுத்திக் கொண்டுமிருக்க வேண்டும். அவ்வாறில்லாமல், அவர்கள் முஸ்லிம்களை எதிர்த்து தாக்கினால் அவர்களை கட்டாயம் எதிர்த்துத் தாக்க வேண்டும்.

***வினா.*** தந்தை காபிராகவும், தனயன் முஸ்லிமாகவுமிருந்தால், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்.?

***விடை***. அத்தனயன் உலக விடயங்களில் மாத்திரம் அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான். எது பற்றி உனக்கு அறிவு (ஆதாரம்) இல்லையோ, அதை எனக்கு நீ இணையாக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால், (அவ்விடயத்தில்) நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படிய வேண்டாம். ஆயினும் இவ்வுலகத்தில் நன்மையான காரியத்தில் நீ அவ்விருவருடனும் (அன்புடன் ஒத்து) உடனிருப்பாயாக, இன்னும் (வழிபாட்டில்) என்பால் திரும்பியவரின் வழியை, நீ பின்பற்றுவாயாக!(31,15) மேலும் கூறுகின்றான். அல்லாஹ்வையும், இறுதி நாளையும்,

விசுவாசங் கொண்ட சமூகத்தினரை, அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களை நேசிப்பவர்களாக (நபியே) நீர் காணமாட்டீர். அவர்கள் தங்களின் பெற்றோர்களாயினும் சரியே.(58,22)

***வினா.*** அல்லாஹ் நமக்கு ஏவியிருப்பதையும், தடுத்திருப்ப தையும் கூறுக?

***விடை.*** அல்லாஹ் ஏகத்துவத்தை வளியுறுத்தி, இணை வைப்பதை வெறுத்திருக்கின்றான். அல்லாஹ் கூறுகின் றான். நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள்.(4,36)

***வினா.*** ஏகத்துவத்தையும் அதன் வகைகளையும் கூறுக?

***விடை.*** ஏகத்துவம் என்றால், வணக்கத்தின் மூலம் அல் லாஹ்வை ஒருமைப்படுத்துவதாகும். அவை மூன்று வகை.

1. ***படைத்தவனை ஒருமைப்படுத்தல்.*** அதாவது அல் லாஹ் தனித்தவன், அவன் உலகிலுள்ளவர்களைப் படைத்து, உணவளித்து, இந்த உலகையே இயக்கிக் கொண்டிருப்பவன். என்று அறிந்து, உண்மைப்படுத்துவ தாகும். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் (நபியே) அவர் களைப்படைத்தவன் யார்? என்று நீர் அவர்களிடம் கேட் பீராயின், அல்லாஹ் தான் என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள்.(43,87)

௨. ***அவனது பெயர்களையும் பண்புகளையும் ஒரு மைப்படுத்தல்.*** அதாவது அல்லாஹ்வும், நபி (ஸல்) அவர்களும், அவனை எப்பெயர் பண்புளைக் கொண்டு வர்ணித்திருக்கின்றார்களோ, அதே போன்று நாமும் அவனை வர்ணிக்க வேண்டும். இந்த வகையை முஷ்ரிக் கீன்களில் சிலர் ஏற்றுக் கொண்ட போதிலும், சிலர் மறுத்து நிராகரித்தனர்.

3. ***வணக்கத்துக்குரியவன் ஒருவன் என்று ஒரு மைப்படுத்தல்.*** அதாவது வணக்கங்களிலுள்ளவை யான, விரும்புதல், பயப்படுதல், ஆதரவு வைத்தல், பிரார்த்தித்தல் போன்ற அனைத்தையும் ஏக இறைவன் ஒருவனுக்கே செய்ய வேண்டும். இவைகளில் வேறு எவ ரையும் கூட்டிணைக்கக் கூடாது. இந்த வகையைத் தான் அன்றைய முஷ்ரிக்கீன்கள் ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்தார்கள்.

***வினா:*** ஏகத்துவத்தின் நிபந்தனைகளைக் கூறுக?

***விடை:*** ஏகத்துவத்தின் நிபந்தனைகள் இரண்டு.

1. உண்மைப்படுத்தல்.
௨. தூய்மையான எண்ணம் வைத்தல்.

உண்மைப்படுத்துவதென்றால், உள்ளத்தாலும், நாவினாலும், செயலினாலும், உண்மைப்படுத்த வேண்டும். தூய்மையான எண்ணம் என்றால், எக் கிரியையை செய்ய முனைந்த போதும், அல்லாஹ்வுக்கு என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

***வினா:*** மனிதன் கட்டாயமாக, அறிந்து கொள்ள வேண்டிய மூன்று விடயங்கள் யாவை?

***விடை:***

1. அடியான் இறைவனை அறிந்து கொள்ளல் .
௨. தனது மார்க்கத்தை அறிந்து கொள்ளல்.
3. தனக்கு அனுப்பப்பட்ட முஹம்மத் நபியைப்பற்றி அறிந்து கொள்ளல்.

***வினா:*** எமது இறைவன் யார்?

***விடை:*** எமது இறைவன் அல்லாஹ். அவன் தான் நம்மையும், இவ்வுலகிலுள்ளவைகளையும் படைத்தான். அவனைத் தவிர வணங்குவதற்கு, தகுதியானவர் வேறு யாருமில்லை.

அல்லாஹ் கூறுகின்றான். எல்லாப் புகழும் உலகைப் படைத்தாளும், அல்லாஹ்வுக்கே உரித்தானது. (1,2)

***வினா.*** அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்குரிய காரணி களைக் கூறுக?

***விடை. அவனது படைப்புகளைப்பற்றி சிந்திப்பது.*** அவ் வாறு சிந்திக்கும் போது, அவனது சக்தி, ஞானம், அருள் போன்றவற்றை புறிந்து கொள்ள முடிகின்றது. அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக வானங்கள், மற்றும் பூமியை, படைத்திருப்பதிலும், இரவும், பகலும், மாறி மாறி வருவதி லும், அறிவுடையோக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின் றன.(3,190) ***அவனது மார்க்க அத்தாட்சிகளை எடுத்து நோக்குவது.*** அல்லாஹ் கூறுகின்றான். இந்த அல்குர் ஆனை, அவர்கள் ஆய்ந்துணர வேண்டாமா? அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து, உள்ளதாக இது இருந்தால், இதில் அனேக முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள். (4,82)

***வினா:*** இஸ்லாம் என்றால் என்ன?

***விடை:*** இஸ்லாம் என்றால், அல்லாஹ் தான், ஒரே இறை வன் எனக்கூறி, அவன் ஏவியவைகளை ஏற்றும், விலக்கி யவைகளை தவிர்ந்தும், அவனுக்கு வழிப்படுவதாகும்.

***வினா:*** இஸ்லாத்தின் படித்தரங்களைக் கூறுக?

***விடை:*** இஸ்லாத்தின் படித்தரங்கள் மூன்று. அவை இஸ் லாம், ஈமான், இஹ்ஸான் போன்றவைகளாகும்.

***வினா:*** இஸ்லாத்தின் அடிப்படைகளை கூறுக?

***விடை:*** இஸ்லாத்தின் அடிப்படைகள் ஐந்து. அவை

1. வணக்கத்துக்குரியவன் ஒருவன் என்றும், அவனது இரு தித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்றும் சாட்சி பகர்தல்.
2. தொழுகையை சிறந்த முறையில் நிறைவேற்றல்.
3. ஏழை வரியை கொடுத்தல்.

4. றம்லான் மாதம் முழுவதும், நோன்பு நோற்றல்.
5. வசதி படைத்தவர்கள், மக்காவுக்குச் சென்று, ஹஜ் கடமையை நிறைவேற்றல்.

***வினா.*** ஈமானின் வரைவிளக்கணத்தையும், அதன் பகுதிகளையும் அதன் அடிப்படைகளையும் கூறுக?

***விடை.*** ஈமான் என்பது, நாவினால் மொழிந்து, உள்ளத்தால் உண்மைப்படுத்தி, உடல் உறுப்புகளினால் அதனை செயல் படுத்துவதாகும். மேலும் அது வழிப்பாட்டின் மூலம் அதிகரிக்கவும், பாவங்களின் மூலம் குறையவும் செய்யும். அது எழுபதுக்கும் மேற்பட்ட பகுதிகளைக் கொண்டது. அவைகளில் மிகவும் உயர்ந்தது, **லாஇலாஹ இல்லல்லாஹ்** என்ற வசனமாகும், அதில் கடைசித் தரத்தில் உள்ளது, பாதைகளில் ஊறு விளைவிக்கும் பொருட்களை அகற்றுவதாகும். வெட்கமும் ஈமானில் உள்ளதாகும் (புகாரி)

ஈமானின் அடிப்படைகள் ஆறு. அவை

1. அல்லாஹ் ஒருவன் என்பதையும்,
2. அவனது மலக்குகளையும்,
3. அவனது வேதங்களையும்,
4. அவனது ரஸூல்மார்களையும்,
5. மறுமை நாளையும்,
6. நல்லவை கெட்டவை அனைத்தும், அவனது ஏட் பாட்டின் பேரில் தான் நடக்கின்றதென்றும், நம்பிக்கை கொள்வதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் (நிர்ணயிக்கப்பட்ட) அளவின் படியே படைத்திருக்கின்றோம்.(54,49) மேலும் கூறுகின்றான். கிழக்கு, மேற்குப்பக்கமாக, உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது கொண்டு, நன்மை செய்ததாக ஆகிவிட மாட்டாது. என்றாலும் நன்மையடைபவர் யாரெனில்

அல்லாஹ்வையும், மறுமை நாளையும், மலக்குமார்களையும், வேதங்களையும், நபிமார்களையும், விசுவாசிப்பவர்களேயாகும்.(உ.!37)

***வினா.*** இஹ்சான் என்றால், என்ன?

***விடை.*** இஹ்சான் என்றால், நாம் அல்லாஹ்வை பார்க்காவிடினும், அவன் நம்மை பார்த்துக் கொண்டிருக்கின்றான். என்ற அச்சத்தோடு, நாம் அவனை வணங்குவதாகும். அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோர்களுடனும், இன்னும், நல்லுபகாரம் செய்து கொண்டிருப்பவர்களுடனும் தான் இருக்கின்றான்.(16,128)

***வினா.*** எமது நபி யார்?

***விடை.*** எமது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் பரம்பரையில் வந்த, ஹாசிம் குலத்தைச் சேர்ந்த, அப்துல்லாஹ்வுக்குப் பிறந்த, முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இக்ர∴ என்ற வசனத்தின மூலம் நபியாகவும், முத்தஸ்ஸிர் என்ற வசனத்தின் மூலம் ரஸூலாகவும், மாறிய அவர் மொத்தமாக அருபத்தி மூன்று வருடங்கள் வாழ்ந்து விட்டு, மரணித்தார்கள். அல்லாஹ் கூறுகின்றான். (போர்வை) போர்த்திக் கொண்டிருப்பவரே, நீர் எழுந்திருப்பீராக! பிறகு (அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! மேலும் உமதிரட்சகனை பெருமைப்படுத்துவீராக! மேலும் உமது ஆடைகளை தூய்மையாக வைத்துக் கொள்வீராக! மேலும் அசுத்தத்தை வெறுத்து விடுவீராக! (நீர் கொடுத்ததை விட) அதிகமானதைப் பெறக்கருதி (மற்றவருக்கு) உபகாரம் செய்யாதீர்.(74.1–6) மேலும் கூறுகின்றான். நபியே நிச்சயமாக, நாம் உம்மை சாட்சியாளராகவும், நன்மாறாயங் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும், அனுப்பி வைத்திருக்கின்றோம். இன்னும் அல்லாஹ்வின் பால், அவனது அமைதியுடன் மக்களை நீங்

கள் அழைப்பதற்காகவும், பிரகாசிக்கும் விளக்காகவும், (நாம் உம்மை அனுப்பி வைத்திருக்கின்றோம்.(35.45)

***வினா.*** நபி (ஸல்) அவர்கள் எப்போது, எவ்வாறு வானலோகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்?

***விடை.*** அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைத்து, பத்து வருடங்களுக்குப் பிறகு தான், வானலோகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். ஜிப்ரயீல் (அலை) அவர்கள், புறாக் எனும் வாகனத்தில், நபி (ஸல்) அவர்களை ஏற்றி, மக்காவிலிருந்து பைதுல் மக்திஸுக்கு எடுத்துச் சென்று, அங்கே நபியவர்கள், ஏனைய நபிமார்களுக்கு தொழுகை நடத்தி விட்டு, வானலோகத்துக்கு ஏறி, அங்கே சில நபிமார்களை சந்தித்து, பின் சித்ரத்துல் முன்தஹா எனும் இடத்திற்கு சென்று, அங்கே அல்லாஹ்வை தரிசித்து, அவன் நபியவர்களுக்கு சன்மானமாக கொடுத்த, தொழுகையை பெற்றுக் கொண்டு, அங்கே சுவனத்தையும் பார்வையிட்டு விட்டு, மக்காவுக்கு வந்து, பஜ்ர்த் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

***வினா.*** ஹிஜ்ரத் என்றால் என்ன, ஹிஜ்ரத் செய்யுமாறு எப்போது, ஏன் ஏவப்பட்டது?

***விடை.*** ஹிஜ்ரத் என்றால், இணை மழிந்து கிடக்கும் நாட்டை விட்டு, இஸ்லாமிய நாட்டுக்குச் செல்வதாகும். இணையுள்ள நாடெனும் போது, அங்கே இறை நிராகரிப்போரின் கலாச்சாரங்கள் மேலோங்கி, இஸ்லாமிய சட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பதையே குறிக்கும். நபி (ஸல்) அவர்களுக்கு, முஷ்ரிக்கீன்கள் எல்லா வகையிலும் நெருக்கடியை கொடுத்த போது, நபித்துவத்துக்குப் பின்னால், பதின்மூன்றாம் வருடம், ரபீயுல் அவ்வல் மாதம், ஹிஜ்ரத் செய்யும் படி ஏவப்பட்டார்கள்.

***வினா.*** நபி (ஸல்) அவர்களின் மரணம், இஸ்லாத்துக்கு பாதிப்பேதேனும், விளைவித்ததா.?

***விடை.*** அவர்களது மரணம், எவ்வித பாதிப்பும் ஏற்படுத்த வில்லை. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் நல்லவை கெட் டவை அனைத்தையும் அறிவித்து, இஸ்லாத்தை பூரணப் படுத்தி விட்டார்கள்.

***வினா.*** நபி (ஸல்) அவர்கள் அறிவித்துச் சென்ற, நல்லவை கெட்டவை யாவை?

***விடை.*** நல்லவை, ஏகத்துவக்கொள்கையும், அல்லாஹ்வின் பொருத்தத்திற்கு உட்பட்ட நற்கிரியைகளுமாகும், கெட் டவை, இணையும், அல்லாஹ் வெறுக்கும் ஏனைய விடயங் களுமாகும்.

***வினா.*** நபி (ஸல்) அவர்கள், யாருக்கு நபியாக அனுப்பப்பட் டார்கள். ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** அவர்கள் மனித, ஜின், இரண்டு இனத்துக்குமாக நபியாக அனுப்பப்பட்டார்கள். அல்லாஹ் கூறுகின்றான். நபியே நீர் கூறுவீராக. மனிதர்களே! நிச்சயமாக நான் உங் கள் அனைவருக்கும் அனுப்பப்பட்ட தூதராகும்.(7,158)

***வினா.*** நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்ப தற்குரிய ஆதாரம் என்ன?

***விடை.*** அல்லாஹ் கூறுகின்றான். நபியே நீரும் அவர்களும் மரணிப்பவர்களேயாகும்.(39,30)

***வினா.*** மனிதன் மரணித்ததன் பின், அவனது நிலைப்பாடு என்ன ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** மனிதன் மரணித்த பின், அவனை கப்பரிலே வைக் கப்படும். அவன் நல்லவனாக இருந்தால், அருளும், கெட்ட வனாக இருந்தால், வேதனையும் கொடுக்கப்படும். நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். கப்று ஒன்றோ, சுவனத்தின் பூங்காவனமாகும், அல்லது நரகத்தின் பாதாள குழியாகும்.

(அகீதா தஹாவிய்யா) பின் மறுமையில் எழுப்பப்பட்டு, கேள்வி கணக்குகள் கேட்கப்பட்டு, கூலி கொடுக்கப்படும். அல்லாஹ் கூறுகின்றான். உங்களை நாம் அந்த மண்ணிலி ருந்து தான் படைத்தோம், அதற்கே உங்களை மீள வைப் போம், மீண்டும் அதிலிருந்தே உங்களை மீண்டும் வெளியாக் குவோம்.(20,55) மேலும் கூறுகின்றான். மேலும் இறைவன் உங்களை(ப் புற்பூண்டுகளைப் போல்) பூமியி(ன் மண்ணி) லிருந்து படைத்தான். பின்னர் அதில் உங்களை மரணிக்கச் செய்து, அவன் மீளவைப்பான், மேலும் அதிலிருந்தே உங் களை வெளிப்படுத்துவான். (71.17.18)

***வினா.*** மறுமையில் எழுப்பப்பட்டதன் பின் நிகழுவதென்ன?

***விடை.*** மறுமையில் மனிதர்கள், எழுப்பப்பட்டு, விசாரிக்கப் பட்டு, அவர்களது செயல்களுக்கேற்ப, கூலி வழங்கப்படும். நல்லவர்களுக்கு சுவனமும், கெட்டவர்களுக்கு நரகமும் கொடுக்கப்படும். அல்லாஹ் கூறுகின்றான். தீமை செய்தோ ருக்கு அவர்களுக்குரிய (தீமையை) கூலியாக கொடுப்பதற் காகவும், நன்மை செய்தோருக்கு நன்மையை, கூலியாக கொடுப்பதற்காகவும் (மறுமையை பிற்படுத்தி வைத்திருக் கின்றோம்.(53.31)

***வினா.*** மறுமையை நிராகரிப்பவனின் சட்டம் என்ன, ஆதா ரத்துடன் கூறுக?

***விடை.*** அவன் காபிராக மாறி, இஸ்லாத்தை விட்டும் வெளி யாகி விடுகின்றான்.அல்லாஹ் கூறுகின்றான்.(மரணித்த பின்னர் நிச்சயமாக உயிர் கொடுத்து) அவர்கள் எழுப்பப் படவே மாட்டார்கள் என்று நிராகரிப்போர் எண்ணிக் கொண் டிருக்கின்றனர், (நபியே) நீர் கூறுவீராக அவ்வாறல்ல என் இரட்சகன் மீது சத்தியமாக, நிச்சயமாக நீங்கள் எழுப்பப் படுவீர்கள், பின்னர் நீங்கள் செய்து கொண்டிருந்தவை களைப் பற்றி நிச்சயமாக நீங்கள் அறிவிக்கப்படுவீர்கள்.

மேலும் அ(வ்வாறு செய்வ)து அல்லாஹ்வுக்கு மிக்க எளிதா னதாகும்.(28,7)

***வினா.*** அல்லாஹ் தூதர்களை அனுப்பியதன் நோக்க மென்ன, அவர்களில் முதலாமவரும், கடைசியானவரும் யாவர்?

***விடை.*** அல்லாஹ் நபிமார்களை, மனிதர்களுக்கு சுவனத் தைக் கொண்டு நன்மாராயம் கூறவும், நரகத்தைக் கொண்டு எச்சரிக்கை செய்யவுமே அனுப்பி வைத்தான். அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வின் மீது மனிதர்க ளுக்கு (சாதகமாக) யாதொரு ஆதாரமும் இல்லாதிருப்ப தற்காக, இத்தூதர்களுக்குப் பின்னரும், தூதர்கள் பலரை (சுவர்கத்தை கொண்டு) நன்மாராயங் கூறுகின்றவர்களாவும், (நரகத்தைக் கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கின்றவர்க ளாகவும், (அல்லாஹ் அனுப்பி வைத்தான்.) (4,165) அவர்க ளில் முதலாமவர், நூஹ் (அலை) அவர்களும், கடைசியான வர், முஹம்மத்(ஸல்) அவர்களுமாவார்கள். அல்லாஹ் கூறு கின்றான்.(நபியே) நூஹுக்கும், அவருக்குப் பின் வந்த நபி மார்களுக்கும், நாம் வஹீ அறிவித்தவாறே, உமக்கும் நிச்சய மாக நாம் வஹீ அறிவித்தோம்.(4,163)

***வினா.*** ஒவ்வொரு சமுதாயத்துக்கும் தூதர்கள் அனுப்பப் பட்டார்களா, ஏன் அவ்வாறு அனுப்பப்பட்டார்கள்?

***விடை.*** ஆம், அல்லாஹ் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் தூதர்களை அனுப்பி, அச்சமுதாயத்தினருக்கு, ஷைத்தான் களை நிராகரித்து, அல்லாஹ்வை மாத்திரம், வணங்கும் படி ஏவுமாறு கூறி அனுப்பி வைத்தான்.அல்லாஹ் கூறுகின்றான். ஒவ்வொரு சமூகத்திலும், திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம், (அத்தூதர் அச்சமூகத்தவர்களிடம்) அல்லாஹ்வையே வணங்குங்கள், (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் ஷைத்தான்களாகிய அனைத்து) தாகூத்திலி

ருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்.(என்று கூறினார்கள்) (16,36)

***வினா.*** தாகூத் என்றால் என்ன?

***விடை*** தாகூத் என்றால், ஓர் அடியான், தான் வணங்க வேண்டிய அல்லாஹ்வை விட்டு விட்டு, தனது சுய விருப்பத்துடன் அவனால் படைக்கப்பட்ட, வேறொருவரை, வணங்குவதாகும்.

***வினா:*** தாகூதின் வகைகளைக் கூறுக?

***விடை:*** தாகூத்கள் பல வகைப்படும். அவைகளில் முக்கியமானவை ஐந்து. அவை.

1. சபிக்கப்பட்ட ஷைத்தான்.
2. சுய விருப்பத்தோடு, வணங்கப்படுபவன்.
3. எவ்விதத் தகுதியுமில்லாத ஒருவன், தன்னை வணங்கு மாறு மனிதர்களை பணிப்பவன்.
4. மறைவான விடயங்கள், தனக்குத் தெரியும் என்று வாதிடுபவன். மேலும் சூனியக்காரன், குறி சொல்பவன் போன்றவர்களும் இதில் அடங்குவர்.
5. அல்லாஹ் இறக்கி வைத்ததல்லாததைக் கொண்டு தீர்ப்பு வழங்குபவன். அல்லாஹ் கூறுகின்றான். (சத்திய இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமுமில்லை, (ஏனெனில்) வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாகத் தெளிவாகி விட்டது.(2,256)

***வினா:*** அல்லாஹ் அனைத்து மக்கள் மீதும், கடமையாக்கியது யாது?

***விடை:*** அல்லாஹ் இம்மனித சமுதாயத்தினர் அனைவருக்கும் அல்லாஹ்வை ஏற்று, ஷைத்தான்களை நிராகரிப்பதை கடமையாக்கினான். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே, எவர் தாகூத்தை (ஷைத்தானை) நிராகரித்து விட்டு அல்

லாஹ்வை விசுவாசிக்கின்றாரோ, அவர் திட்டமாக அறுந்து போகாத பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். (2,256)

***வினா:*** வணக்கம் என்றால் என்ன?

***விடை:*** சொல், செயல்களில், அல்லாஹ் விரும்பக்கூடிய அனைத்தும் வணக்கமாகும். அல்லாஹ் கூறுகின்றான். (நபியே) உமதிரட்சகன் அவனைத் தவிர (மற்றெவரையும்) நீங்கள் வணங்கக் கூடாதென்றும், பெற்றோருக்கு உப காரம் செய்ய வேண்டுமென்றும், கட்டளையிட்டிருக்கின் றான்.(17,23) அல்லாஹ் இவ்வசனத்தில் தனக்கு இணை வைக்காமல் தன்னை மாத்திரமே வணங்கும் படியும், தமது பெற்றோர்கள் இணை வைத்தவர்களாக இருந்த போதி லும் அவர்களுக்குரிய முறையில் பேருபகாரம் செய்யும் படியே ஏவுகின்றான்.

***மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக முஆத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அடியார்கள் அல் லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமை அவனுக்கு இணை வைக்காமல் வணங்குவதும். அல்லாஹ் மனி தர்களுக்கு செய்ய வேண்டிய கடமை அவனுக்கு இணை வைக்காதவரை வேதனை செய்யாமலிருப்பது மாகும். (புகாரி முஸ்லிம்)***

***வினா.*** மேற்கூறப்பட்ட நபிவாக்கின் பிரகாரம் இரண்டு கட மைக்குமுள்ள வித்தியாசத்தையும், அது கூறும் படிப்பினை யையும் கூறுக?

***விடை:*** அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டியது கட்டாயக் கடமையாகும். அல்லாஹ் அடியார்களுக்கு செய் வது சிறப்புக்காகவும் உபகாரத்துக்காகவுமாகும். இது கூறும் படிப்பினை கட்டாயமாக வணக்கங்களை அல்லாஹ் வுக்கு மாத்திரமே செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

***வினா:*** தௌஹீதின் சிறப்புகளில் சிலதை கூறுக?
***விடை:*** அதன் சிறப்புகளின் சில பின்வருமாறு.

- இத் தௌஹீதில் சிறிதளவேனும், உள்ளத்திலிருந் தால், நரகத்தில் நிறந்தரமாக இருப்பதை விட்டும் அது பாதுகாக்கும். அது பூரணமாக இருந்தால் நரகத்தில் நுழைவதை விட்டும் பாதுகாக்கும்.
- நற்கிரியைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்படுவ தும், பூர்த்தியாகுவதும், அவைகளுக்குரிய நன்மைகள் கிடைப்பதும், தவ்ஹீதின் அடிப்படையினாலாகும்.
- தவ்ஹீத்வாதிகளுக்கு அல்லாஹ் இவ்வுலகில் வெற்றியளிப்பதையும், உதவி செய்வதையும், கண்ணி யம், சிறப்பு, நேர்வழி போன்றவற்றை பெற்றுத்தருவ தனையும் பொறுப்பேற்றுள்ளான்.
- தவ்ஹீத்வாதிகளுக்கு கெடுதிகள் நிகழாமல், சிறந் ததோர் வாழ்க்கையை, கொடுத்து கண்ணியப் படுத்து கின்றான்.

***வினா:*** தவ்ஹீதின் உண்மை நிலைப்பாடு என்ன? அதனை உண்மைப்படுத்துபவனுக்கு கிடைக்கும் நன்மை யாது?

***விடை:*** தவ்ஹீதின் உண்மை நிலை, ஷிர்க், பித்அத், அனாச்சாரம், பாவம், போன்றவற்றிலிருந்து தூய்மை யாக்குவதுடன். அதனை சிறந்த முறையில் அறிந்து நடைமுறைப்படுத்துவதுமாகும். அதை உண்மைப்படுத் துபவனுக்கு கிடைக்கும் கூலி எவ்வித கேள்விகளோ தண்டனைகளோ இன்றி சுவனம் நுழைவதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக இப்றாஹீம் பின் பற்றப்படும் ஒரு தலைவராகவும், அல்லாஹ்வுக்குப் பயந்து அடிபணிபவராகவும், (இணை வைத்தலை விட்டு முற்றிலும் நீங்கி) ஏகத்துவத்தின் பால் சார்ந்தவராகவும் இருந்தார். மேலும் இணை வைப்போரில் (ஒருவராக) அவர்கள் இருக்கவில்லை.(16,120)

***வினா:*** ஷிர்க்கின் வகைகளைப்பற்றி விளக்குக?

***விடை:*** ஷிர்க் இருவகைப்படும்.

1. பெரிய ஷிர்க், அதாவது அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய வணக்கத்தில், ஏதாவதொன்றை அல்லாஹ் அல்லாதவருக்கு செய்வதாகும். இவ்வாறு செய்பவர் முஷ்ரிக்காகி விடுவதுடன் சுவனமும் அவருக்கு ஹரா மாக்கப்பட்டு விடுகின்றது.
2. சிறிய ஷிர்க், இந்த வகையான ஷிர்க் பெரிய ஷிர்க் களவில், இட்டுச் செல்லக்கூடிய அனைத்து சொல் செயல்களுமாகும். உதாரணமாக அல்லாஹ் அல்லாத வரைக் கொண்டு சத்தியம் செய்தல், அல்லாஹ்வுக்குச் செய்யும் வணக்கங்களில் தூய்மையான எண்ணம் இல்லாமலிருத்தல், போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

(ان الله لايغفر أن يشرك به ويغفر ما دون ذلك لمن يشاء)

***வினா.*** மேற்கூறப்பட்ட வசனத்தை விளக்கி, அது கூறும் படிப்பினையைக் கூறுக?

***விடை.*** அல்லாஹ் தனது அடியார்களில், இணைவைத்த வர்களைத் தவிர, ஏனையவர்கள் செய்த எப்பாவத்தை யும், தான் விரும்பினால் மன்னிப்பான். என்பதைப் பற்றி கூறுகின்றான். இவ்வசனத்திலிருந்து விளங்கப்படும் கூற்று யாதெனில். ஷிர்க் என்பது பெரும் பாவமாகும், அதை செய்தவன் பாவமன்னிப்புத் தேடாதவரை அல் லாஹ் அவனை மன்னிக்கவே மாட்டான். அது தவிர்ந்த

ஏனைய பாவங்களை, அல்லாஹ் நாடினால் மன்னித்து விடுவான், அல்லது அதற்கேற்றவாறு அவனை தண்டிப்பான்.

***வினா.*** ரியா:. என்றால் என்ன?

***விடை.*** ரியா:. என்பது, ஒரு மனிதன் செய்யும் செயலை மற்ற மனிதர்கள் பார்த்து, புகழ வேண்டும். என்பதற்காக செய்வதனைக் குறிக்கும்.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக இப்னு மஸ் ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒருவன் இணை வைத்தவனாக மரணித்தால், அவன் நரகம் நுழைந்து விட்டான். (புகாரி)***

***வினா.*** மேற் கூறப்பட்ட நபி வாக்கை விளக்குக?

***விடை.*** இதன் மூலம், நபி (ஸல்) அவர்கள் அறிவிப்பதாவது, யார் அல்லாஹ்வுக்கு இணை வைத்து வணங்கி, அதிலிருந்து மீண்டு பாவமன்னிப்புத் தேடாமல் மரணித்தால் அவன் நரகம் நுழைந்து விடுகின்றான் என்பதாகும்.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். யார் அல்லாஹ் வுக்கு, இணை வைக்காமல் அவனை சந்திக்கின் றாரோ, அவர் சுவனம் நுழைந்து விட்டார். யார் இணை வைத்தவராக அவனை சந்திக்கின்றாரோ, அவர் நரகம் நுழைந்து விட்டார்.(முஸ்லிம்)***

***வினா.*** இதில் கூறப்பட்ட சந்திப்பு யாது என்பதனையும், அது எப்போது நிகழும் என்பதனையும் விளக்குக?

***விடை.*** அல்லாஹ்வை சந்திப்பதென்பது, அவனை நேருக்கு நேர் காண்பதாகும். இச்சந்திப்பு மறுமையில் தான் நிகழும்.

***வினா:*** இஸ்லாத்தின் பால் அழைப்பதின் சட்டத்தையும், முதலாவதாக, எதைக் கொண்டு அழைக்க வேண்டுமென்பதனையும், அதற்குரிய ஆதாரத்தையும் கூறுக?
***விடை:*** இஸ்லாத்தின் பால் அழைப்பது கட்டாயக் கடமையாகும். இஸ்லாத்தின் பால் அழைப்பவன், முதன் முதலாக, தவ்ஹீதின் பால் அழைக்க வேண்டும். அது தான் அடிப்படைக் கடமைகளில் முக்கியமானதாகும். அத் தவ்ஹீத் உரிய முறையிலிருந்தால் தான், அனைத்து நற்கிரியைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். நபி (ஸல்) அவர்கள் முஆத் (ரலி) அவர்களுக்கு, கட்டளையிடும் போது, நீ முதலாவதாக லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமாவின் பால் அவர்களை அழைப்பாயாக, என்று கூறினார்கள்.
(இவ்வாறே) அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரிகளையும், தங்கள், சந்நியாசிகளையும் தங்கள், தெய்வங்களாக எடுத்துக் கொண்டார்கள்.(9,31)

***நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் யார் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறி, அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் அனைத்தையும், நிராகரித்து நடந்தால், அவனது செல்வங்களும் இரத்தமும் ஹராமாகி விடுகின்றது. அவனது விசாரணை அல்லாஹ்விடமே இருக்கின்றது. (முஸ்லிம்)***

***வினா:*** இந்த நபி வாக்கிலே நபி (ஸல்) அவர்கள் உயிர், பொருள் பாதுகாப்புகளை எதிலே கூறியிருக்கின்றார்கள்?
***விடை:*** அவைகளை இரண்டு விடயத்தில் கூறியிருக்கின்றார்கள்.

1. தெளிவுடனும், உறுதியுடனும், விருப்பத்துடனும் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை சொல்வது.
2. அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படும், சிலை விக்ர கம் போன்றவைகளை நிராகரிப்பது.

***வினா:*** யார் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை சொல்கின்றாரோ. என்ற நபியவர்களின் வார்த்தை எதனைக் குறிக்கின்றது?

***விடை.*** அதனது பொருளை உணர்ந்து, அது கூறுபவை களை நடைமுறைப்படுத்தி, உறுதி கொள்வதையே குறிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். அன்றியும், அல் லாஹ் (மறுமை நாளில் ஈஸாவிடம்) மர்யமுடைய மகன் ஈஸாவே! அல்லாஹ்வைத் தவிர என்னையும் என்னு டைய தாயையும் இரண்டு வணக்கத்திற்குரியவர்களாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று மனிதர்களுக்கு நீர் கூறினீரா? என வினவப்படும்.(5,116)

***வினா.*** அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படுபவைகளை நிராகரிப்பது என்றால் என்ன?

***விடை.*** அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படும், மலக்கு கள், நபிமார்கள், நல்லடியார்களை நிராகரித்து அவர் களை விட்டும் நீங்கிக் கொள்வதாகும்.

***வினா.*** அவனது செல்வமும் உயிரும் ஹராமாகி விட்டது என்பதின் பொருள் என்ன?

***விடை.*** அவனது செல்வத்தை எடுப்பதோ, இரத்தத்தை ஓட்டுவதோ கூடாது, ஏனெனில் அவன் இஸ்லாத்தில் நுழைந்து விட்டான், எனவே இஸ்லாம் அவனது செல் வத்தையும் உயிரையும் பாதுகாக்கின்றது.

**நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். மந்திரித்த லும், தாயத்துக்களும், நூல்களும், இணை வைப்பி லுள்ளதாகும். (அஹ்மத், அபூ தாவூ த்)**

***வினா.*** மந்திரித்தல் என்றால் என்னவென்பதையும், அதன் சட்டத்தையும் கூறுக?

***விடை.*** மந்திரித்தல் என்பது, நோயினால் பீடிக்கப்பட் டவர்களுக்கு, ஓதி ஊதுவதாகும். அவ்வாறு ஓதி ஊது வது மூன்று நிபந்தனைகளுடன் ஆகுமானதாகும்.

1. இஸ்லாம் கூறும் துஆக்களின் மூலமாக இருத்தல்.
2. குர்ஆன் மூலமும், அல்லாஹ்வின் பெயர் பண்புக ளின் மூலதுமாகவும் இருத்தல்.
3. அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரம் தான் அது மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புதல்.

இவை தவிர்ந்தவை அனைத்தும் கூடாது. மேற் கூறப் பட்ட வகையில் மந்திரிப்பதும், அதற்குரிய கூலியை பெற் றுக் கொள்வதிலும், எத் தவறும் கிடையாது. எனவே நோயாளி சூனியக்காரர்களிடம் செல்வதையும், அவர்களிடம் வைத்தியம் செய்வதையும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

***வினா.*** தாயத்தையும், அதனது சட்டத்தையும் கூறுக?

***விடை.*** தாயத் என்பது, பிள்ளைகளுக்கு கண்ணூரு படாம லிருப்பதற்காக, கழுத்துகளிலும், ஏனைய இடங்களிலும், தொங்கவிடப்படும் பொருளுக்குச் சொல்லப்படும். அவை களை இஸ்லாம் நிராகரித்து தடை செய்துள்ளது.

***வினா.*** தவ்லா என்பது என்னவென்பதையும், அது ஏன் இணையில் சேர்க்கப்பட்டுள்ளதென்பதையும் விளக்குக.

***விடை.*** தவ்லா என்பது கணவன் மனைவிக்கிடையில் அன்பை ஏற்படுத்த, செய்யப்படும் ஒரு வகை சூனியமாகும்.

அல்லாஹ் அல்லாத ஒருவரிடம், நல்லது கெட்டது எதிர் பார்க்கப்படுவதால், அது இணையில் கணிக்கப்படுகின்றது.

***வினா.*** கற்கள், மரங்கள் போன்றவைகளைக் கொண்டு பரகத் பெறுவதின் சட்டம் என்ன?

***விடை.*** மேற்கூறப்பட்டவைகள் மூலம் பறகத் பெறும் நோக்குடன், தொட்டு முத்தமிடுவது, அல்லது அதிலிருந்து சாப்பிடுவது இணையைச் சார்ந்ததாகும்.

***அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் (வணங்கும்) லாத்தையும், உஸ்ஸாவையும் கண்டீர்களா? மற்றொன்றாகிய மூன்றாவதான மனாத்(என்னும் பெண் விக்ரகத்) தையும் (நீங்கள் கண்டீர்களா) (53.19,20)***

***வினா.*** மேற்கூறப்பட்ட பெயர்கள் எதனை குறிக்கின்றதென்பதைக் கூறி, வசனத்தை விளக்குக?

***விடை.*** மேற்கூறப்பட்ட மூன்று பெயர்களும் அறியாமைக் கால மக்கள் வணங்கிக் கொண்டிருந்த தெய்வங்களாகும். அல்லாஹ் அவர்களைப் பார்த்து, அல்லாஹ் அன்றி அவைகள், நன்மையோ, தீமையோ விளைவிக்கக் கூடியவைகளா? என வினா எழுப்பி மறுத்துரைக்கின்றான்.

***அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய அறுப்பு (குர்பானி)யும் என் வாழ்வும், என் மரணமும், அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தானவையாகும். என்று நபியே நீர் கூறுவீராக! அவனுக்கு யாதோர் இணையுமில்லை, (துணையுமில்லை) இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன். இன்னும் (அவனுக்குக் கீழ்ப் படிந்த) முஸ்லிம்களில் (இந்த உம்மத்தில்) நான் முதன்மையானவன் (என்றும் கூறுவீராக) (6.162,163)***

***வினா.*** மேற்கூறப்பட்ட வசனத்தை விளக்குக?

***விடை.*** அல்லாஹ் தனது தூதரைப் பார்த்து முஹம்மதே அல்லாஹ் அல்லாதவரை வணங்கி, அவர்களுக்கு அறுத் துப் பழியிட்டுக் கொண்டிருக்கும், அவர்களைப்பார்த்து எனது தொழுகை, அறுப்பு குர்பானி, எனது வாழ்வு, மரணம் அனைத்தும், உலகை ஆட்சி செய்யும் அல்லாஹ்வுக்கே உரித்தானது, அவனுக்கு இணையாக ஒன்றுமில்லை, இதைக் கொண்டே நான் ஏவப்பட்டிருப்பதுடன், முஸ்லிம் களில் முதன்மையானவனாகவுமிருக்கின்றேன்.என்று கூறு வீராக என்று கட்டளையிடுகின்றான். மேலும் அல்லாஹ் கூறு கின்றான். ஆகவே நீர் உமதிரட்சகனைத் தொழுது, இன் னும் (குர்பானியும் கொடுத்து அதை) அறுப்பீராக.(108,2)

***அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் நான்கு விடயங்களை எனக்கு அறி வித்துத் தந்தார்கள். அவை அல்லாஹ் அல்லாத வருக்கு அறுப்பவரையும், பெற்றோரை சபிப்பவனை யும், குற்றவாளியை அவனது தண்டனையிலிருந்து பாதுகாப்பவனையும், பூ மியின் அடையாளங்களை மாற்றுபவனையும், அல்லாஹ் சபிப்பானாக. என்று அறிவித்தார்கள். (முஸ்லிம்)***

***வினா.*** அல்லாஹ் அல்லாதவருக்கு அறுப்பவனை நபியவர் கள் ஏன் சபித்தார்கள்?

***விடை.*** அவ்வாறு அறுப்பது அல்லாஹ்வுக்கு செய்ய வேண் டிய வணக்கத்தை அவனால் படைக்கப்பட்டவனுக்கு செய்வதனாலாகும்.

***வினா.*** பெற்றோரை சபிப்பதென்றால் என்ன?

***விடை.*** தாயையோ, தந்தையையோ தூற்றுதல். அவை இரு வகைப்படும்.

1. அவர்களை நேரடியாக தூற்றுதல்.

உ. ஒருவனை தூற்றுவதின் மூலம், அவன் இவனுடைய தாயையோ தந்தையையோ தூற்றுதல்.

***வினா.*** நேர்ச்சை என்றால் என்ன?

***விடை.*** நேர்ச்சை என்பது நிறை வேற்றல், எனப் பொருள் படும். நேர்ச்சை செய்வது மார்க்கத்தில் தனக்கு, கடமையில்லாத ஒன்றை கடமையாக்கிக் கொள்வதாகும்.

***அல்லாஹ் கூறுகின்றான். அவர்கள் நேர்ச்சையை நிறை வேற்றுவார்கள்.***

***வினா.*** இத் திருவசனம் அறிவிக்கும் விடயம் என்ன?

***விடை.*** நேர்ச்சையை நிறைவேற்றுவதையும், அவ்வாறு நிறை வேற்றுபவர்களை புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றது.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். யார் அல்லாஹ்வுக்கு வழிப்பட நேர்ச்சை வைக்கின்றாரோ, அவர் தனது நேர்ச்சையை நிறைவேற்றட்டும். யார் பாவம் செய்வதற்கு நேர்ச்சை வைக்கின்றாரோ அவர் அதை தடுத்துக் கொள்ளட்டும். (புகாரி)***

***வினா.*** மேற் கூறப்பட்ட நபி வாக்கை விளக்குக?

***விடை.*** இஸ்லாம் மார்க்கமாக்கிய விடயங்களைச் செய்ய நேர்ந்தவர்கள் அவைகளை நிறை வேற்றுவதும், அது தடுத்தவைகளைச் செய்ய நேர்ந்தவர்கள், அவைகளை நிறை வேற்றாமல் இருப்பதும், அவசியமாகும்.

***வினா.*** பாதுகாப்புத் தேடுவதென்றால் என்ன?

***விடை.*** பாதுகாப்புத் தேடுவதெனும் போது, ஒதுங்குதல், பாதுகாப்புப் பெறல் எனப்படும்.

***அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் நிச்சயமாக மனிதர்களிலுள்ள ஆண்கள் பலர் ஜின்களிலுள்ள ஆண்கள் பலரிடம் (தங்களைக்) காக்கத் தேடிக்***

***கொண்டிருந்தனர், இதனால் அவர்கள் அவர்களுக்கு கர்வத்தை அதிகமாக்கி விட்டார்கள்.(72,6)***

***வினா.*** மேற்கூறப்பட்ட திருவசனத்தை விளக்குக?

***விடை.*** அறியாமைக்கால மக்களில் ஒருவர் ஒரு கால் வாய்க் குப் பக்கத்தில் வந்து, தன்னிலே பயம் ஏற்பட்டால், அக் கால்வாயின் ஜின்னிடத்தில், தனது கூட்டத்தினரின் கெடு திகளை விட்டும் பாதுகாப்புத் தேடிக்கொள்வார். இதனால் அந்த ஜின்களும் அவர்களுக்கு, பெருமையுடன் பயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன என்பதை தெளிவு படுத்து கின்றான்.

***நபி(ஸல்) அவர்கள் நவின்நார்கள். யார் ஓர் வீட் டில் நுழையும் போது, அஊது பிகலிமாதில்லாஹித் தாமாத்தி, மின் ஷர்ரி மா கலக். என்று கூறுகின் றாரோ, அவர் அந்த வீட்டை விட்டு வெளியேறும் வரை, அவரை எவ்வித கெடுதியும் தீண்டாது.(முஸ்லிம்)***

***வினா.*** இந்த நபி வாக்குக் கூறும் படிப்பினையை கூறுக?

***விடை.*** அது கூறும் படிப்பினைகள் பின்வருமாறு.

1. ஜின்களை கொண்டு பாதுகாவல் தேடாமல், அல் லாஹ்வின் வேதத்தைக் கொண்டு பாதுகாப்புத் தேடல்
௨. பிரார்த்தனையின் சிறப்பு.

***வினா.*** அபயம் தேடுதல் என்றால் என்ன?

***விடை.*** அபயம் தேடுதல் என்றால், தனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தை நீக்கிக் கொள்ளத் தேடுவதாகும்.

***வினா.*** அபயம் தேடுவதின் வகைகளை, அதன் சட் டத்துடன் கூறுக?

***விடை.*** அபயம் தேடுதல், மூன்று வகைப்படும்.

1. அல்லாஹ்விடம் அபயம் தேடுதல். இது மார்க்கத் திலுள்ளதும் கடமையுமாகும்.

உ. படைப்பினங்களால் முடியாத விடயங்களில் அவர்களி டம் அதனை நிறை வேற்ற வேண்டுதல். இது மார்க்கத் தில் தடுக்கப்பட்டவைகளிலுள்ளதாகும்.

3. உயிரோடிருக்கும் மனிதர்களிடம் அவர்களால் முடியு மான விடயங்களில் நிறை வேற்றி வைக்க வேண்டுதல். இதுவும் மார்க்கம் ஆகுமாக்கியவைகளிலுள்ளதாகும்.

***வினா.*** பிரார்த்தனையின் வகைகளைக் கூறுக?

***விடை.*** பிரார்த்தனை இரு வகைப்படும்.

1. தான் செய்த நல்லமல்கள் மூலமாக அல்லாஹ் விடம் பிரார்த்தித்து, நெருக்கத்தைப் பெறல்.

உ. தனக்கு தேவையானதை, அல்லாஹ்விடம் வேண்டி பெற்றுக் கொள்ளல்.

***அல்லாஹ் கூறுகின்றான். மேலும் அல்லாஹ்வை விடுத்து மறுமை நாள் வரை (அழைத்த போதிலும் தனக்கு பதில் கொடுக்காதவர்களை அழைப்பவனை விட மிக வழிகெட்டவன் யார்? அவர்களோ இவர்க ளுடைய அழைப்பைப் பற்றி மறந்தவர்களாக உள்ள னர். மேலும் மனிதர்கள் (மறுமை நாளுக்காக) ஒன்று திரட்டப்பட்டால் (வணங்கப்பட்டவர்களான) அவர்கள் இவர்களுக்கு விரோதிகளாக இருப்பர். இவர்கள் (தங்களை) வணங்கிக் கொண்டிருந்ததையும் அவர் கள் நிராகரித்து விடுவர்.(புல,ரு,ல)***

***வினா.*** இத்திருவசனத்தை விளக்குக?

***விடை.*** இத்திருவசனத்தில் அல்லாஹ் அல்லாதவனை வணங்குபவன் வழிகேடன் எனவும், அவன் இவனது தேவைகளை, ஒரு போதும் நிறைவேற்றி வைக்கமாட்டான் எனவும், மறுமை நாளில் அந்த பொய் தெய்வங்கள் அவனை

விட்டும் நிரபராதியாகி, தங்களை வணங்கியதையும் நிராக ரித்து விடுவார்கள், என்பதனையும் விவரித்துக் கூறியுள்ளான்.

***அல்லாஹ் கூறுகின்றான். (உங்களுடைய தெய் வங்கள் சிறந்தவையா) அல்லது கடுந்துன்பத்திற் குள்ளாக்கப்பட்டவனுக்கு, அவனை இவன் அழைத் தால், (அவனுக்குப்) பதிலளித்து மேலும் (அவனுடைய) அத்துன்பத்தை நீக்கி (வைப்பவன் சிறந்தவனா)***

***வினா.*** இத்திருவசனத்தை விளக்குக?

***விடை.*** அன்றைய அரேபிய முஷ்ரிகீன்கள், அல்லாஹ் அல் லாதவர்களால் எந்த இன்பத்தையும், துன்பத்தையும் ஏற் படுத்த முடியாது. என்ற விடயத்தை அறிந்து வைத்திருந் ததோடு, அவர்கள் அப்பொய் தெய்வங்களை வணங்கிக் கொண்டிருந்தார்கள். இதனை அவர்களுக்குக் கூறிய நோக்கம், இது அவர்களுக்கெதிரான அத்தாட்சியாக நாளை மறுமையில் இருக்க வேண்டும் என்பதற்காகும். இவ்வசனம் கூறும் படிப்பினை, அவ்வாறு அல்லாஹ் அல்லா தவரை வணங்குவது அல்லாஹ்வுக்கு இணை வைப்ப தைக் குறிக்கும் என்பதாகும்.

***அல்லாஹ் கூறுகின்றான். அவர்கள் விக்கிரகங்க ளையும், தாகூத்தை(ஷைத்தானை)யும் விசுவாசிக்கின் றனர்.(டி,டு)***

***வினா.*** மேற்கூறப்பட்ட அறபுப் பதத்தில் வரும் ஜிப்த், தாகூத், என்பவை எதனைக் குறிக்கின்றன?

***விடை.*** உமருப்னுல் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின் றார்கள். ஜிப்த் என்றால் சூனியமும். தாகூத் என்றால் ஷைத் தானுமாகும்.

***வினா.*** பரிந்துரை என்றால் என்ன, அதனது வகைகளைக் கூறி விளக்குக?

***விடை.*** பரிந்துரை என்றால் ஒரு நல்ல விடயத்தை செய்வ தற்கோ, அல்லது தீய விடயத்தை தடுப்பதற்கோ ஒருவரி டம் உதவியாக இருக்கும்படி வேண்டுவதாகும். அது இரு வகைப்படும்.

1. ஆகுமானது. அதாவது அல்லாஹ்விடத்தில், அல் லது படைப்பினங்களுக்கு முடியுமான விடயத்தில் அவர்களிடத்தில் தனது தேவையை நிறைவேற்றும் படி வேண்டுதல்.
2. தடுக்கப்பட்டது. அல்லாஹ்வுக்கு மாத்திரம் முடியு மான விடயங்களில் அல்லாஹ் அல்லாதவரிடம் அதனை நிறைவேற்றி வைக்கும் படி வேண்டுதல்.

***வினா.*** ஆகுமாக்கப்பட்ட பரிந்துரையின் நிபந்தனைகளை ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** அதற்குரிய நிபந்தனைகள் இரண்டு.

1. பரிந்து பேசுபவருக்கு அல்லாஹ் அனுமதியளித்தி ருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான். அவனது அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்து பேசுபவர் யார்? (2.255)
2. எவருக்கு பரிந்து பேசப்படுகின்றதோ, அதை அவன் பொருந்திக் கொள்ளவும் வேண்டும். அல்லாஹ் கூறு கின்றான். அவன் பொருந்திக் கொண்டவரைத் தவிர (மற்றெவருக்கும்) இவர்கள் பரிந்துரை செய்யவும் மாட்டார்கள்.(21.28)

***வினா.*** மறுமையில் நபியவர்களுக்கிருக்கும் பரிந்துரையின் வகைகளைக் கூறுக?

***விடை.*** மறுமையில் நபியவர்கள் செய்யும் பரிந்துரை ஆறு வகைகளாகும். அவையாவன

1. மறுமையில் விசாரணையை ஆரம்பிக்கும் படி அல் லாஹ்விடம் வேண்டுதல்.

உ. சுவர்க்கவாசிகளை சுவர்க்கத்தில் நுழையச் செய்ய வேண்டுதல்.

3. பாவிகளில் சிலர் நரகில் நுழையாமலிருக்க வேண் டுதல்.

4. ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டு, பாவம் செய்து நரகில் நுழைந்த சிலரை, அதிலிருந்து விடுதலை செய்ய வேண்டுதல்.

5. சுவனவாசிகள் சிலரின் அந்தஸ்தை உயர்த்த வேண்டுதல்.

6. தனது சாச்சாவான அபூதாலிபின் வேதனையை குறைக்க வேண்டுதல்.

***வினா.*** நபியவர்களின் பரிந்துரை மூலம் பாக்கியம் பெறுபவர் கள் யார்?

***விடை.*** யார் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று மொழிந்து, தூய்மையான முறையில் அதனை நடைமுறைப்படுத்துகின் றார்களோ, அவர்கள் தான் அதன் மூலம் பாக்கியம் பெற்ற வர்களாவார்கள்.

***வினா.*** குர்ஆன் தடுத்த பரிந்துரை யாது?

***விடை.*** இணை கலந்த பரிந்துரையாகும்.

***அல்லாஹ் கூறுகின்றான். அவனது அனுமதியின்றி அவனிடத்தில் பரிந்து பேசுபவர் யார்?*** (உ.உ௫௫)

***வினா.*** மேற்கூறப்பட்ட வசனத்தை விளக்கி, அது இறங்கிய தின் காரணத்தைக் கூறுக?

***விடை.*** பரிந்துரை என்பது மறுமையில் அவனது அனுமதியு டன் தான் இருக்க வேண்டும். அன்றைய இணை வைப் பாளர்கள் நாங்கள் விக்ரகங்களை வணங்கியது, எம்மை அவை அல்லாஹ்விடம் நெருக்கி வைப்பதற்காகும் என்று கூறிய காரணத்துக்காகத் தான் இதனை அல்லாஹ் இறக்கி வைத்தான். அல்லாஹ் கூறுகின்றான். எங்களை

அவர்கள் நெருக்கத்தால் அல்லாஹ்வுக்கு சமீபமாக்கி வைப்பார்கள் என்பதற்காகவேயன்றி அவர்களை நாங்கள் வணங்கவில்லை. (என்று கூறுகின்றனர்) (39.3)

***அல்லாஹ் கூறுகின்றான். (நபியே!) நிச்சயமாக நீர் விரும்பியோரை நேர் வழியில் செலுத்தி விட மாட்டீர். (௨௦,56)***

***வினா.*** மேற்கூறப்பட்ட வசனத்தை விளக்கி, அது இறங்கிய காரணத்தையும் கூறுக?

***விடை.*** நபியே நீங்கள் விரும்புபவருக்கெல்லாம் நேர்வழி காட்ட முடியாது. மாற்றமாக உங்களுக்கு அதற்குரிய வழி வகைகளைத்தான் காண்பித்துக் கொடுக்க முடியும். நேர் வழியை கொடுப்பது அல்லாஹ்விடமுள்ளது என்று நபிய வர்களுக்கு தெளிவு படுத்துகின்றான். நபி (ஸல்) அவர்கள் தனது சாச்சாவுக்கு இஸ்லாத்தை கற்றுக் கொடுக்க அதிக ஆர்வம் கொண்ட போது தான், இதனை அல்லாஹ் இறக்கி வைத்தான்.

***வினா.*** நேர்வழியின் வகைகளை ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** நேர்வழி இரு வகைப்படும்.

1. நலவின் பால் நேர்வழி காட்டல், அதாவது கெட்டவ னுடைய உள்ளத்தில் நேர்வழியை ஏற்படுத்துதல். இது அல்லாஹ்வால் மாத்திரமே முடியும். அல்லாஹ் கூறு கின்றான். (நபியே) நிச்சயமாக நீர் விரும்பியோரை நேர் வழியில் செலுத்தி விடமாட்டீர்.(௨0,56)

௨. வழி காட்டல், தெளிவு படுத்தல். இது மனித சமுதா யத்தில் அனைவராலும் முடியும். அல்லாஹ் கூறுகின் றான். (நபியே) நிச்சயமாக நீர் (மனிதர்களுக்கு) நேரான வழியின் பால் வழிகாட்டுவீர். (௨5,52) நபியவர்கள் தான்,

அல்லாஹ்வைப்பற்றி தெளிவு படுத்துபவரும், அவனது சட்டங்களை எடுத்துக் கூறுபவருமாவார்.

***அல்லாஹ் கூறுகின்றான். வேதத்தையுடையவர் களே! உங்கள் மார்க்கத்தில் நீங்கள் அளவு கடந்து செல்லாதீர்கள். (6,171)***

***வினா.*** இவ்வசனத்தை விளக்கி, வேதக்காரர்கள் யார் என் பதனையும், **குலுவ்வு** என்றால் என்ன என்பதனையும் விளக்குக?

***விடை.*** வேதக்காரர்களான யூத கிரிஸ்தவர்களை நோக்கி, உங்களுக்கு அல்லாஹ் இட்ட கட்டளைகளை மீறாதீர்கள். மனிதர்களை அவர்களது அந்தஸ்தை விட உயர்த்தி விடா தீர்கள் என்று எச்சரிக்கை செய்கின்றான். **குலுவ்வு** என்றால் வரம்பு மீறுவது அளவுக்கதிகம் ஒருவரை கண்ணியப்படுத் துவது என பொருள் படும்.

அல்லாஹ் கூறுகின்றான். மேலும் அவர்கள் (தம் சமூகத் தாரிடம்) உங்களுடைய (வணக்கத்திற்குரிய) தெய்வங்களை நிச்சயமாக நீங்கள் விட்டு விடாதீர்கள். வத்து, ஸுவாஉ, எகூஸ், யஊக், நஸ்ர் (ஆகிய விக்கிரகங்)களையும் நிச்சய மாக நீங்கள் விட்டு விடாதீர்கள் என்றும் கூறினார்கள்.(71,23) இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மேற்கூறப்பட்ட திருவச னத்தைப் பற்றி பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். இப் பெயர்கள் நூஹ் (அலை) அவர்களின் கூட்டத்தில் இருந்த நல்லடியார்களுடையதாகும். அவர்கள் மரணித்த பின் அவர் கள் இருந்த இடங்களில் சிலைகளை செய்து வைக்குமாறு ஷைத்தான் அம்மக்களுக்கு பணிக்க, அவர்களும் அவ்வாறு செய்து, அவர்களது பெயர்களையும் அதற்கு சூட்டினர். அவர்கள் மரணித்த பின் அவர்களைத் தொடர்ந்து வந்த சமுதாயம் அவைகளை வணங்கத் தொடங்கி விட்டார்கள்.

இப்னு கய்யும் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் மரணித்த பின்பு அவர்களின் கப்ருகளில் போய் அவர்களுக்கு சிலைகள் செய்தார்கள். சிறிது காலம் சென்றதும் அவர்களை வணங்க முட்பட்டு விட்டார்கள்.

**நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். உங்களுக்கு எல்லை மீறுவதை எச்சரிக்கின்றேன். உங்களுக்கு முன்னுண்டான சமுதாயம் அதன் மூலம் தான் அழிக்கப் பட்டார்கள். (முஸ்லிம்)**

**வினா.** மேற்கூறப்பட்ட நபி வாக்கை விளக்குக?

**விடை.** முன்னைய சமுதாயங்கள் நபிமார்களையும், நல்லடியார்களையும், வணங்கி வழிப்பட்டதைப் போன்று தனது சமுதாயமும் வணங்கி அழிந்து விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு எச்சரித்திருக்கின்றார்கள்.

**உம்மு சலமா (ரலி) அவர்கள் தான் ஹபஷா நாட்டில் கண்ட சில கோயில்களையும், அதிலே உள்ள விக்ரகங்களையும் நபியவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். அதற்கவர்கள். அவர்களில் ஒரு மனிதர் மரணித்து விட்டால், அவரது கப்ரிலே பள்ளியை கட்டி, அதிலே சிலைகளை செதுக்கிவிடுவார்கள். இவர்கள் தான் அல்லாஹ்விடத்தில் மிகவும் கெட்டவர்கள். (புகாரி முஸ்லிம்)**

**வினா.** மனிதர்களில் மிகவும் கெட்டவர்கள் யார் என்பதனையும், ஏன் அவ்வாறு கெட்டவர்களாக மாறினார்கள் என்பதனையும் விளக்குக?

**விடை.** அல்லாஹ்விடத்தில் மிகவும் கெட்டவர்கள் கப்ருகளில் பள்ளிகளைக் கட்டி அதிலே சிலைகளை செதுக்கி விடுபவர்களாகும். இதனால் அவர்கள் வழி கெட்டுப் போவது மட்டுமல்லாமல், மற்றவர்களையும் வழி கெடுத்து,

அவர்களுக்கு அதனை வழிமுறையாக்கியும் விடுகின்றார்கள்.

***வினா.*** கப்ருகளில் பள்ளிகளை கட்டுவதின் சட்டத்தை ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** கப்ருகளில் பள்ளிகளைக் கட்டுவது ஹராமாகும். அதற்கு சான்றாக மேற்கூறப்பட்ட நபி வாக்கை ஆதாரமாக கொள்வதுடன், நபியவர்கள் அவ்வாறு செய்வதை தடுத்து அவ்வாறு செய்பவனை சபித்துமுள்ளார்கள்.

***அல்லாஹ் கூறுகின்றான். (விசுவாசிகளே) உங்களிலிருந்தே, திட்டமாக ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். (உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டப்படுவது அவருக்கு மிக வருத்தமாக இருக்கும். உங்கள் மீது மிக்க பேராசை கொண்டவர். விசுவாசிகளோடு மிக இரக்கமுள்ளவர் மிகக் கிருபையுடையவர்.(9,128)***

***வினா.*** மேற்கூறப்பட்ட திருவசனத்தை விளக்குக?

***விடை.*** அல்லாஹ் மு:மீன்களுக்கு செய்த அருளைப்பற்றி விவரிக்கின்றான். அதாவது அவர்களது பாஷை, இனம் போன்றவைகளை கவனித்து, அவர்களிலே உண்மை, நீதம் உள்ளடக்கிய ஒரு மனிதரை தேர்ந்தெடுத்து, அருள் செய்ததையும், பின்பு அவர் அம்மனிதர்களுக்கு நேர்வழி கிடைத்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள பாடுபடுவதையும், அவர்களுக்கு ஏற்படும் கஷ்ட துன்பங்களை வெறுத்து, அவர்களுடன் கிருபையாகவும், இரக்கமாகவும் இருப்பது போன்ற அவரது நற்குணங்களையும் எடுத்துக் கூறுகின்றான்.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் அல்லாஹ் எனக்கு பூ மியை சுருக்கிக் காண்பித்தான். அதனது கிழக்கையும், மேற்கையும் பார்த்தேன். எனக்கு காட்***

***டப்பட்ட இடங்களை எனது சமுதாயம் ஆட்சி செய்வார் கள். மேலும் எனக்கு சிவப்பு, வெள்ளையான இரண்டு பொக்கிஷங்கள் கொடுக்கப்பட்டன. மேலும் எனது சமுதாயம் பஞ்சத்தால் அழிக்கப்படாமலும், பகைவர் களை அவர்கள் மீது சாட்டி அவர்கள் அவர்களை அடக்கி ஆளாமலும் இருக்க வேண்டினேன். அதற்கு இறைவன் ஏ முஹம்மதே! நான் ஒரு விடயத்தை ஏட் படுத்தி விட்டால், அதிலிருந்து மீள மாட்டேன். நான் உனது சமுதாயம் பஞ்சத்தால் அழியாமலும் பகைவர் கள் பல கோணங்களிலிருந்து வந்தாலும், அடக்கி ஆளாமல் இருப்பதற்கும் பொறுப்பேற்றுக் கொள்கின் றேன். அவர்கள் தங்களைத் தாங்களே அழித்து, தங்களையே சிறையிட்டும் கொள்வார்கள்.(முஸ்லிம்)***

***வினா.*** நபியவர்கள் கூறியது போன்று, அவரது சமுதாயம் கிழக்கையும், மேற்க்கையும் ஆண்டார்களா?

***விடை.*** ஆம் மேற்குப் பகுதியில் தன்ஜா அஸ்பானியா வரையும், கிழக்கில் இந்தியா சீனா வரைக்கும் ஆட்சி செய்தார்கள்.

***வினா.*** இரண்டு பொக்கிஷங்கள் என்பன யாவை?

***விடை.*** இரண்டு பொக்கிஷங்கள் என்பது, பாரிஸ் நாட்டு செல்வமும், ரோம் நாட்டு செல்வமுமாகும். அவை உமர் (ரலி) அவர்களின் காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

***வினா.*** சூனியத்தின் வரைவிளக்கணத்தைக் கூறுக?

***விடை.*** மனிதனின் உள்ளத்திலும், உடம்பிலும், விளைவை ஏற்படுத்தி, நோயையோ, மரணத்தையோ, கணவன் மனை விக்கிடையில் பிரிவினையையோ ஏற்படுத்தும் சில மந்தி ரிப்பும், முடிச்சுக்களும், இன்னும் சில செயல்களுமாகும்.

***வினா.*** சூனியத்தின் சட்டத்தை விளக்கி, சூனியம் செய்பவனுக்குரிய தண்டனை யாதென்பதையும் ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** சூனியம் ஹராமாகும். ஏனெனில் அது அல்லாஹ்வை நிராகரித்து, ஈமானையும் ஏகத்துவத்தையும், அழிக்கக் கூடிய முறையில் செய்யப்படும் ஒரு செயலாகும். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் அவ்விருவரும், நாங்கள் சோதனையாக இருக்கிறோம். ஆதலால் (இதைக் கற்று) நீ காபிராகி விட வேண்டாம் என்று கூறும் வரை அவர்கள் (அதனை) ஒருவருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை. (2,102)

சூனியக்காரனுக்குரிய தண்டனை அவனை கொலை செய்வதாகும். நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கின்றார்கள். சூனியக்காரனுக்குரிய தண்டனை வாலால் அவனை வெட்டுவதாகும்.(திர்மிதி) மேலும் உமர் (ரலி) அவர்கள் தனது வேலையாட்களுக்கு கடிதம் எழுதும் போது, சூனியம் செய்யும் ஆண், பெண், இரு தரப்பினரையும் கொலை செய்யும் படி கட்டளையிட்டு எழுதினார்கள்.(புகாரி)

***நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். பறவைகளைக் கொண்டு துற்குறி பார்ப்பதும், கோடு போட்டு துற்குறி பார்ப்பதும், கேள்வி பார்வை போன்றவைகளைக் கொண்டு துற்குறி பார்ப்பதும் சூனியத்தை சார்ந்ததாகும்.(அஹ்மத்)***

***வினா.*** மேற்கூறப்பட்ட நபி மொழியை விளக்குக?

***விடை.*** பறவைகளைக் கொண்டு சகுனம் பார்ப்பதென்பது, பறவைக்கு கோபமூட்டி, அதனை பறக்க விட்டு, அதன் பெயர், சப்தம், அது செல்லும் பாதைகளைக் கொண்டு சகுனம் பார்ப்பதாகும்.

கோடு போட்டு சகுனம் பார்ப்பதென்பது. பூமியிலே அல்லது மண்ணிலே கோடு போட்டு பார்ப்பதாகும். அல்லது

சூனியத்துக்குரிய முறையில் கற்களை எறிந்து மறைவான வைகளை அறிவிப்பதாகும்.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். யார் குறி சொல்பவனிடம் வந்து, அவன் சொல்வதை உண்மைப் படுத்தினால். அவனது நாற்பது நாள் தொழுகை ஏற் றுக் கொள்ளப்படமாட்டாது. (முஸ்லிம்) மேலும் அறிவிக் கின்றார்கள். யார் குறி சொல்பவனிடம் வந்து, அவன் சொல்வதை உண்மைப்படுத்தினால், முஹம்மதின் மீது இரக்கப்பட்ட வேதத்தை நிராகரித்து விட்டான். (அபூ தாவுத்)***

***வினா.*** இறக்கப்பட்ட வேதம் என்பது யாது?

***விடை.*** இறக்கப்பட்ட வேதம் என்பது அல் குர்ஆனும் அஸ் ஸுன்னாவுமாகும்.

***வினா.*** மேற்கூறப்பட்ட இரு நபி வாக்கையும் ஒன்று படுத்தி, அது கூறும் படிப்பினையைக் கூறுக?

***விடை.*** முதலாவது நபி வாக்கு சாஸ்திரக்காரனிடம் வந்து கேட்பதையும், இரண்டாவது நபி வாக்கு கேட்டு உண்மைப் படுத்துவதையும் அறிவிக்கின்றது.

***அது கூறும் படிப்பினைகள்.***

- அல்லாஹ்வுக்கு மாத்திரம் தெரிந்த, மறைமுக அறிவை, தனக்கும் தெரியும் என்று வாதிடும் குறி சொல் பவர்கள் இறை நிராகரிப்பாளர்களாகும்.
- குறி சொல்பவர்களிடம் வந்து, அவர்கள் சொல் வதை கேட்டு, அவைகளை உண்மைப்படுத்துவது ஹராமாகும்.
- அவர்களிடம் வந்து அவர்கள் சொல்வதை உண் மைப்படுத்துபவர் இறை நிராகரிப்பாளராவார்.

- குர்ஆனை நம்புவதும், குறி சொல்பவர்களை உண் மைப்படுத்துவதும் ஒன்று சேர மாட்டாது.

***வினா.*** அர்ராப், ரும்மால், காஹின், முன்ஜிம். என்பவர்கள் யாவர், அவர்களைப் பற்றி விளக்குக?

***விடை.*** மேற் கூறப்பட்டவர்கள் அனைவரும் மறைமுகமான விடயங்கள் தனக்குத் தெரியும் என்று வாதிடுபவர்கள். என் றாலும் அவர்கள் ஒவ்வொருவரது வழிமுறைகளும் மாறு பட்டவையாகும்,

***அர்ராப்.*** அவன் ஷைத்தானிடமிருந்து, கேட்டவைகளைக் கொண்டும், அல்லது சில முன்னறிவிப்புக்களைக் கொண் டும், களவு போனவைகள் காணாமல் போனவைகள் போன்றவற்றை அறிவிப்பவன்.

***ரும்மால்.*** மறைவானவைகளை மண்ணிலே கோடிடுவது கொண்டு, அல்லது கற்களை எறிவது கொண்டு அறிவிப்ப வன்.

***காஹின்.*** தனக்கு மறைவானவைகள் தெரியும் என வாதிடு பவன்.

***முன்ஜிம்.*** நட்சத்திரங்கள் கோள்களைக் கொண்டு பூமியில் நடை பெறுபவைகளை அறிவிப்பவன்.

நட்சத்திரங்கள், கோள்கள் மூலம் அறிவிப்பது மூன்று வகைப்படும்.

- நட்சத்திரங்கள் மூலம் தான் அனைத்தும் நடை பெறுகின்றன என நம்புதல், இது இறை நிராகரிப்பாகும்.
- அல்லாஹ்வின் நாட்டத்தினடிப்படையில் நட்சத் திரங்களின் பாதைகள், கூட்டங்கள், பிரிவுகள் போன் றவை கொண்டு பூமியில் நிகழும் விடயங்களை அறிந்து கொள்ளல் இது இணையைச் சார்ந்ததாகும்.

- அவைகளைக் கொண்டு கிப்லாவை, நேரங்களை அறிந்து கொள்ளல். இது ஆகுமானதாகும். அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் (வழி காட்டும்) பல அடையாளங் களையும் (அவன் அமைத்துள்ளான்) நட்சத்திரங்க ளைக் கொண்டும் (பிரயாணிகளாகிய) அவர்கள் (தங்கள்) வழியை அறிந்து கொள்கின்றனர்.(16,16)

***வினா.*** ஜின் பிடித்த ஒருவர், ஜின் உள்ள ஒருவரிடம் சென்று வைத்தியம் செய்வதின் சட்டத்தைக் கூறுக?

***விடை.*** இப்னு பாஸ் எனும் அறிஞர் கூறும் போது, அவ்வாறு சென்று அவர்களிடம் வைத்தியம் செய்வது மக்ரூஹாகும். இன்று அதிகமான மக்கள், இவ்வாறான விடயங்களில் ஈடுபடு கின்றார்கள். இவை சில வேளை, தனது ஏகத்துவக் கொள் கையையே மாற்றி விடும். அதனால் அவர்களிடம் செல்லா மல் இருப்பது மிகவும் சிறந்ததாகும்.

***வினா.*** ததய்யுர் என்றால் என்னவென்பதையும், அதன் சட்டத்தையும் கூறுக?

***விடை.*** ததய்யுர் என்பது, பறவைகளின் சப்தத்தைக் கொண்டு, சகுனம் பார்ப்பதாகும். இது கூடாது இணையைச் சேர்ந்ததாகும்.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். தொற்று நோய், பறவைகள், ஆந்தைகளின் சப்தம், சபர் மாதம் போன் றவைகளைக் கொண்டு துற்குறி பார்த்தல் போன்ற வைகளெல்லாம், இஸ்லாத்திலுள்ளவைகளல்ல. (புகாரி)***

***வினா.*** மேற் கூறப்பட்ட நபி வாக்கின் சொற்களுக்குரிய கருத்தைக் கூறுக?

***விடை.*** மேற்கூறப்பட்ட நபி வாக்கு அறியாமைக்கால மக்கள் நம்பிக் கொண்டிருந்த சில மூடப்பழக்க வழக்கங்களை மறுத்துறைக்கின்றது.

***அத்வா.*** என்பது ஒரு நோய் அல்லாஹ்வின் ஏற்பாடின்றி தானாகவே, இன்னொரு மனிதரில் தொற்றிக் கொள்ளும் என்ற கருத்தைக் கொடுக்கும்.

***அத்தீரா.*** பறவைகளைக் கொண்டு துற்சகுனம் பார்த்தல்.

***அல் ஹாம்மா.*** பறவையினத்தைச் சேர்ந்த ஆந்தை ஒரு வீட்டில் வந்து நின்று விட்டால், அந்த வீட்டில் அல்லது அவரது சொந்தக்கார வீட்டில் மரணம் சம்பவிக்கும் என்று நம்புதல்.

***சபர்.*** வயிற்றிலுள்ள ஒரு வித புளு, பசியெடுக்கும் போது சப்தமிடும். ஒரு வேளை இது மனிதனை கொன்று விடவும் கூடும். இதை அவர்கள் தொற்று நோய் என நம்பியிருந்தனர். அல்லது சபர் மாதம், சகுனம் பிடித்த மாதம் என்ற தவறான கருத்தும் அவர்களிடம் இருந்து வந்தது.

***நவ்ஃ.*** நட்சத்திரம் விழும் இடம், எந்த இடத்தில் விழுகின்றதோ அங்கு மழை பெய்யும் எனக் கருதுதல்.

***கவ்ல்.*** இது கோபத்தில் ஒரு வகை, இது பிரயாண பாதைகளில் ஏற்பட்டு, பாதையை மாற்றி அவர்களை அழித்து விடும் எனக் கருதுதல்.

***வினா.*** சகுனங்களின் வகைகளைக் கூறி, பஃல் என்றால் என்னவென்பதையும், அதற்கும் சகுனத்திற்குமுள்ள வித்தியாசத்தையும் கூறுக?

***விடை.*** சகுனம் இரு வகைப்படும்.

- ***பஃல்.*** என்பது சிறந்த வார்த்தை, அதாவது மனிதன் அவ்வார்த்தையை கேட்கும் போது அதைக் கொண்டு சந்தோசமடைவான். அதன் மூலம் அவனது

ஆதரவும் எதிர்பார்ப்பும் உறுதியாகி, அல்லாஹ்வின் மீது நம்பிக் கையும் அதிகரிக்கும்.

- தடுக்கப்பட்ட சகுனம், அதாவது தான் செய்ய விரும்பும் ஒரு விடயத்தை செய்ய விடாமல் தடுத்து விடக் கூடியதாகும். இவ்வாறு செய்வது, மனிதன் அல்லாஹ் அல்லாத ஒன்றின் மீது நம்பிக்கை வைப்ப தால் மார்க்கத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

இரண்டுக்குமுள்ள வித்தியாசம் ***பஃல்*** சந்தோசமான விட யத்துக்கும், மோசமான விடயத்துக்கும் பாவிக்கப்படும். ***தீரா.*** மோசமான விடயத்துக்கு மாத்திரமே பாவிக்கப்படும்.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். இறைவா! நீ தான் நல்லவைகளை ஏற்படுத்துபவன். கெட்டவை களை தடுத்து நிறுத்துபவனும் நீ தான். திரும்புதலும் அதற்கு சக்தி படைத்தவனும் நீதான்.***

***வினா.*** மேற் கூறப்பட்ட நபி வாக்குக் கூறிய நல்லவை கெட்டவை யாவை,?

***விடை.*** குறி பார்ப்பது, நல்லதையோ, கெட்டதையோ ஏற் படுத்த மாட்டாது. மாற்றமாக இறைவா நீதான் அவைகளை ஏற்படுத்துகின்றாய். நல்லவை என்பது நிஃமத்துக்களும், கெட்டவை என்பது, மனிதனுக்கு ஏற்படும் சோதனை களுமாகும்.

***விடை.*** நட்சத்திரங்கள் படைக்கப்பட்டதின் நோக்கத்தை ஆதாரத்துடனும், அவை அல்லாததற்குத்தான் அவை படைக்கப்பட்டிருக்கின்றன என நம்புபவனின் சட்டத் தையும் கூறுக?

***விடை.*** நட்சத்திரங்கள் மூன்று விடயங்களுக்காக படைக் கப்பட்டுள்ளன. அவையாவன,

- வானத்தை அழகு படுத்துவதற்காக. அல்லாஹ் கூறுகின்றான். மேலும் நிச்சயமாக நாம் (பூமிக்குச்) சமீப மான வானத்தை (நட்சத்திரங்களால் ஆன) விளக்கு களைக் கொண்டு அலங்கரித்திருக்கின்றோம்.(67,5)
- ஷைத்தான்களை துரத்துவதற்குரிய எறிபொருட் களாக பயன்படுத்துவதற்காக. அல்லாஹ் கூறுகின் றான். இன்னும் அவைகளை ஷைத்தான்களுக்கு எறியப் படுபவைகளாகவும் நாம் அமைத்தோம். (67,5)
- பாதைகளைக் கண்டுபிடிக்கும் அடையாளங்களாக பயன்படுத்துவதற்காக. அல்லாஹ் கூறுகின்றான். இன் னும் (வழிகாட்டும்) பல அடையாளங்களையும் (அவன் அமைத்துள்ளான்) நட்சத்திரங்களைக் கொண்டும் (பிர யாணிகளாகிய) அவர்கள் (தங்கள்) வழியை அறிந்து கொள்கின்றனர்.(16,16) யார் இவை அல்லாதவைக்கு படைக்கப்பட்டிருக்கின்றன என நம்புகின்றானோ, அவன் சரியான பாதையை தவற விட்டு, வழி கேட்டிலே இருந்து கொண்டிருக்கின்றான் என்பதை தெளிவு படுத்துகின்றது.

***அல்லாஹ் கூறுகின்றான். (அல்லாஹ் அளித்துள் ளவற்றுக்கு) உங்கள் நன்றியை நிச்சயமாக நீங்கள் பொய்ப்படுத்துவதையே (பிரதியாக) ஆக்குகின்றீர் களா.(56,82)***

***வினா.*** மேற் கூறப்பட்ட வசனத்தை விளக்குக?

***விடை.*** குறைஷிக் காபிர்களே! அல்லாஹ் அவனது ரஹ் மத்தை, அருட் கொடையை உங்களுக்கு அருளி, மழையை பொழிவித்து, புற்பூண்டுகளை உயிர்ப்பித்திருக்கின்றான்.

அதன் மூலம் நீங்கள் ஜீவியம் நடத்திக் கொண்டே, இந்த மழை நட்சத்திரங்கள் மூலம் கிடைத்தது என்று கூறிக் கொண்டிருக்கின்றீர்கள். உண்மையில் நீங்கள் பொய்யர்க ளாகவே இருக்கின்றீர்கள்.

***வினா.*** நேசத்தின் வகைகளைக் கூறி விளக்குக?

***விடை.*** நேசம் நான்கு வகைப்படும்.

- அல்லாஹ்வை நேசித்தல், இவ்வாறு நேசிப்பது ஈமானி லுள்ளதாகும்.
- அல்லாஹ்வுக்காக நேசம் வைத்தல், அவனது நபிமார் களையும், ரஸூல்மார்களையும், அவனது நல்லடியார்களை யும் நேசிப்பதுடன், அவன் விரும்பும் நல்லமல்களையும் நேசிப்பதைப் போன்றவைகள் இதிலடங்கும்.
- அல்லாஹ்வுடன் வேறொன்றை இணைத்து நேசித் தல். உதாரணமாக இணை வைப்பாளர்கள் அல்லாஹ் வுடன் சேர்த்து, விக்ரகங்களை நேசிப்பதைப் போன்ற வைகள் இதிலடங்கும்.
- இயற்கை அன்பு. அவை மூன்று வகைப்படும்.

1 பெற்றோருக்கு அன்பு காட்டுவது போன்று, கண்ணியத் தினால் உருவாகும் அன்பு.

௨ பிள்ளைகளுக்கு அன்பு செலுத்துவது போன்று. பாசத் தினால் உருவாகும் அன்பு.

3 ஏனைய மனிதர்களில், சாப்பாட்டில், குடிப்பில், உடை யில், திருமணத்தில் ஏற்படும் அன்பைப் போன்று. அறிமுகத்தின் பேரில் உருவாகும் அன்பு.

***வினா.*** அல்லாஹ் அடியானையும், அடியான் அல்லாஹ்வை யும் விரும்ப வைக்கும் காரணிகள் யாவை?

***விடை.*** அவைகள் பத்துக் காரணிகளாகும் அவை பின்வருமாறு.

1 குர்ஆனை ஓதி, அதன் கருத்துக்களை விளங்கி, அதைக் கொண்டு செயல் படுதல்.

௨ பர்ளான தொழுகைகளுக்குப் பின் உள்ள சுன்னத்துக் களை தொழுதல், மேலும் நல்லமல்களை அதிகதிகம் செய்து தடுக்கப்பட்டவைகளை விட்டும் ஒதுங்கியிருத்தல்.

3 எல்லா நேரங்களிலும் நாவாலும், உள்ளத்தாலும், செயல் முறையாலும் அல்லாஹ்வை தியாணித்தல்.

4 ஆசைகள் மேலோங்கும் போது, தனது விருப்பத்தை விட்டு, அல்லாஹ்வின் விருப்பத்துக்கு முன்னுரிமை கொடுத்தல்.

5 தனது உள்ளத்தை அல்லாஹ்வின் பெயர் பண்புகளை உச்சரிப்பதற்கு பழக்கிக் கொள்ளல்.

6 அல்லாஹ் அருளிய நி∴மத்துக்களுக்கு நன்றி செலுத்தல்.

7 அவனிடம் உள்ளம் உடைந்து, பணிவாய் இருத்தல்.

8 இரவின் கடைசிப்பகுதியில் தனித்திருந்து துஆப்பிரார்த் தனை செய்வதில் முயற்சித்தல்.

9 நல்லவர்களுடன் உட்கார்ந்து, அவர்களின் நல்ல விடயங்களை எடுத்து நடக்க முயற்சித்தல்.

10 அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் இருக்கும் அன்பை அழித்துவிடக்கூடிய, பொய் பேசல் ஹராத்தை சாப்பிடல், அநியாயம் செய்தல், போன்றவற்றை விட்டும் ஒதுங்கியிருத்தல்.

***வினா.*** பயத்தின் வகைகளைக் கூறி விளக்குக?

***விடை.*** பயம் என்பது திடுக்கிடல், மனக்கலக்கம், அபாயம் ஏற்படும் என நினைத்தல் போன்றவைகளைக் குறிக்கும். பயம் பல வகைப்படும்.

1. அல்லாஹ்வை வணங்குவதற்காக, அவனை நெருங்குவதற்காக பயப்படல், இது ஈமானில் உள்ள உயர்வான பண்பாகும்.
உ. மறை முகமான விடயங்களுக்கு பயப்படல். அதா வது அல்லாஹ் அல்லாத விக்ரகங்கள், ஷைத்தான்கள், மரணித் தவர்கள் போன்றோர் தனக்கு ஏதாவது தீங்கு செய்து விடுவார்கள் எனப்பயப்படல். இது இஸ்லாம் தடுத்த இணையைச் சார்ந்ததாகும்.
3. மனிதர்களுக்குப் பயந்து, தனக்கு இஸ்லாம் கடமை யாக்கிய விடயங்களை விட்டு விடல். இதுவும் இணை யைச் சார்ந்ததாகும்.
4. பகைவன் வேட்டைப்பிராணி போன்றவைகளுக்கு பயப்படுவதைப் போன்ற இயற்கைப் பயம், இவ்வாறு பயப்படுவதில் எத்தவறும் இல்லை.

***அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வுடைய பள் ளிகளைப் பரிபாலனம் செய்கிறவரெல்லாம், அல்லாஹ் வையும் இறுதி நாளையும் விசுவாசித்து, தொழுகையை யும் நிறைவேற்றி, ஸக்காத்தும் கொடுத்து, அல்லாஹ் வையன்றி மற்றெவருக்கும் பயப்படாமலும் இருக்கின்ற வர்கள்தாம். எனவே அத்தகையோர் நேர்வழி பெற்ற வர்களில் அவர்கள் இருக்கப் போதுமானவர்கள். (9,18)***

***வினா.*** மேற்கூறப்பட்ட வசனத்தை விளக்கி, பள்ளியை நிர்வ கிப்பதென்றால் என்னவென்பதையும் விளக்குக?

***விடை.*** பள்ளியை நிர்வகிப்பவர்கள், அல்லாஹ்வையும், மறு மையையும் உள்ளத்தால் உறுதிப்படுத்தி, உறுப்புகளால் நடைமுறைப்படுத்தி, தொழுகையை, அதன் சட்டதிட்டங் களை கவனித்து தொழுது, தனது செல்வத்தில் உரியவர்க ளுக்கு ஸகாத்தும் கொடுத்து, அல்லாஹ்வை அஞ்சி நடந்து, அவனது ஏவல் விலக்கல்களை கடைபிடித்து நடப்பவர்கள் தாம் அதற்கு தகுதி பெற்றவர்கள். என்று அல்லாஹ் தெளிவுபடுத்துகின்றான். பள்ளியை நிர்வகிப்ப தென்றால் அதனை பரிபாலனம் செய்தல், கட்டுதல், புனர் நிர்மாணம் செய்தல், வணங்கி வழிப்பட்டு தியானம் செய் தல் போன்றவைகளைக் குறிக்கும்.

***வினா.*** தவக்குலின் வகைகளைக் கூறி, அதற்கும் ஈமானுக் குமுள்ள தொடர்பினைக் கூறுக?

***விடை.*** தவக்குல் என்பது, பொறுப்புச் சாட்டல் என பொருள்படும். அது நான்கு வகைப்படும்.

1 நல்லது தீயது அனைத்தையும், அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டல். இது அவசியமும் ஈமானிலுள்ளது மாகும்.

௨ அல்லாஹ்வுக்கு மாத்திரமே முடியுமான விடயங்களில், அவன் அல்லாத மரணித்தவர்கள், போன்றவர்களிடம் பொறுப்புச் சாட்டல். இது பெரிய இணையைச் சாரும்.

3 உயிரோடுள்ள மனிதர்களிடம், அவர்களுக்கு முடியுமான விடயங்களில் பொறுப்புச் சாட்டல். இது சிறிய ஷிர்க் கைச் சாரும்.

4 மனிதனுக்கு முடியுமான விற்றல், வாங்கல், போன்ற விடயங்களில் வேரொருவனை பொறுப்புச் சாட்டல் இது ஆகுமானதாகும். இவ்வாறு செய்யும் போது, அவ னிடம் பொறுப்பு சாட்டி விட்டேன் என்று

கூறாமல், அவனைப் பொறுப்பு சாட்டி விட்டேன் என்று கூற வேண்டும்.

***அல்லாஹ் கூறுகின்றான். (உண்மையான) விசுவாசிகள் யாரென்றால் அல்லாஹ் (அவன் பெயர் அவர்கள் முன்) கூறப்பட்டால் அவர்களுடைய இதயங்கள் பயந்து நடுங்கிவிடும், மேலும் (இவ் வேதத்தை இறக்கி வைத்த) அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், அவை அவர்களுக்கு ஈமானை அதிகப்படுத்தும், அவர்கள் தங்கள் இரட்சகனின் மீது (தங்கள் காரியங்களை ஒப்படைத்து முழு மையாக) நம்பிக்கையும் வைப்பார்கள்.(௮,௨)***

***வினா.*** இவ்வசனத்தை விளக்கி, இது கூறும் படிப்பினையைக் கூறுக?

***விடை.*** அல்லாஹ் மு.:.மீன்களைப் பற்றி கூறி, அவர்களின் ஈமானை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சில நல்ல பண்புகளையும் கூறுகின்றான். அவை.

- அவர்களுக்கு அல்லாஹ்வைப்பற்றி ஞாபகப்படுத் தப்பட்டால், உள்ளங்கள் உருகி, அவனது கட்டளை களை நிறைவேற்றி அவனது விலக்கல்களை தவிர்ந்து நடந்து கொள்வார்கள்.
- அவர்களுடைய அனைத்து விடயங்களையும் அல் லாஹ்விடமே பொறுப்புச் சாட்டி விடுவார்கள்.
- அவர்களுக்கு அல்லாஹ்வின் அத்தாட்சிகள் கூறப் பட்டால் அவர்களது ஈமான் அதிகரிக்கும்.
- அவர்கள் தொழுகையை உரிய முறைப்படி நேரங்கள், சட்ட திட்டங்களைக் கவனித்து பேணி வருவார்கள்.

- அவர்கள் தமது செல்வத்திலிருந்து அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வார்கள்.

இந்த ஐந்து விடயங்களாலும், அல்லாஹ்வின் சிறந்த பேறுகளையும், உயர்ந்த படித்தரங்களையும், சுவனத்திலே பெற்றுக் கொள்வார்கள். இவ்வசனம் நன்மைகள் மூலம் ஈமான் அதிகரிக்கவும், பாவங்கள் மூலம் குறையவும் செய்கின்றது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

***அல்லாஹ் கூறுகின்றான். அ(தற்க)வர் வழி கெட்டவர்களைத் தவிர வேறெவர் தன் இரட்சகனின் அருளைப்பற்றி நிராசை கொள்வார்? என்றார். (15. 56)***

***வினா.*** பொறுமையின் வரைவிளக்கணத்தைக் கூறி, அதன் பகுதிகளையும், சட்டத்தையும், ஈமானில் அதன் படித் தரத்தையும் கூறுக?

***விடை.*** பொறுமை என்றால், கோபத்தை விட்டு தனது உள்ளத்தையும், முறைப்பாட்டை விட்டு தனது நாவையும், கஷ்டங்கள் ஏற்படுமிடத்து, கன்னங்களில் அடித்துக் கொள்வதையும் தவிர்த்துக் கொள்வதாகும். மனித உடம்பில் தலைக்கு எந்த அந்தஸ்த்து இருக்கின்றதோ, அதே போன்றுதான் ஈமானில் இப்பொறுமைக்குரிய அந்தஸ்தும். பொறுமை மூன்று வகைப்படும்.

- அல்லாஹ் ஏவியவைகளில் பொறுமையாயிருத்தல்.
- அவன் விலக்கியவைகளில் பொறுமையாயிருத்தல்.
- அவன் ஏற்படுத்திய துன்பங்களில் பொறுமையாயிருத்தல்.

பொறுமையாயிருப்பது முஸ்லிம் மீது கட்டாயக் கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே எவர் அல்

லாஹ்வை விசுவாசிக்கின்றாரோ, அவருடைய இதயத்திற்கு (அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்டதை பொருந்திக் கொண்டு பொருமையுடனிருக்க) அவன் வழி காட்டுகிறான்.(64,11)

***அல்லாஹ் கூறுகின்றான். (இவ்வாறே) அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரிகளையும், தங்கள் சந்நியாசிகளையும், மர்யமுடைய குமாரர் மஸீஹையும், தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டனர். (9,31)***

***வினா.*** மேற்கூறப்பட்ட வசனத்தை விளக்கி, அதன் படிப்பினைகளைக் கூறி, அஹ்பார், ருஹ்பான் என்போர் யாவர் என்பதையும் விளக்குக?

***விடை.*** அன்று வாழ்ந்த முஷ்ரிக்கீன்கள் அல்லாஹ் அன்றி அவர்களது பாதிரிமார்களையும், சந்நியாசிகளையும், வணங்கி வழிப்பட்டு, அல்லாஹ் கூறிய ஹலால் ஹராம்களை தனது மனோ இச்சைக்கேற்ப மாற்றி வழிப்பட்டு வந்ததை இத்திருவசனத்திலே விளக்கிக் கூறுகின்றான். அஹ்பார் என்றால் பாதிரிகளும், ருஹ்பான் என்றால் சந்நியாசிகளுமாவார்கள்.

***அல்லாஹ் கூறுகின்றான். அறியாமைக் காலத்துத் தீர்ப்பையா அவர்கள் தேடுகின்றனர்? உறுதியாக நம்பிக்கை கொண்ட சமூகத்தார்க்குத் தீர்ப்பளிப்பதில் அல்லாஹ்வை விடவும் மிக்க அழகானவன் யார்? (5,50)***

***வினா.*** மேற் கூறப்பட்ட திருவசனத்தை விளக்கி, அது கூறும் படிப்பினையைக் கூறுக?

***விடை.*** அல்லாஹ் அவனது சட்டதிட்டங்களையும், அவனது ஏவல் விலக்கல்களையும், அவனது நீதங்களையும் விட்டு விட்டு, தமது சிந்தனைகளையும், மனோ இச்சை

களையும், மனிதர்கள் இயற்றிய சட்டங்களையும், இஸ்லாமிய வறையறையின்றி பின்பற்றுவதை நிராகரிக்கின்றான். அவ் வாறு செய்வது முன்னைய அறியாமைக்கால மக்கள் செய்த தவறும், வழிகேடெனவும் தெளிவு படுத்துகின்றான்.

மேலும் மேற் கூறப்பட்ட வசனம் அல்லாஹ் ரஸூலின் சட்டங்கள் அன்றி, சாதாரண மனிதர்களின் சட்டங்களை எடுத்து பின்பற்றுவதை எச்சரிக்கின்றது.

***அல்லாஹ் கூறுகின்றான். இன்னும், அல்லாஹ் வுக்கு மிக்க அழகான பெயர்கள் இருக்கின்றன, ஆகவே அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள், அவனுடைய பெயர்களில் (தவறான பொருள் கொண்டு) திரித்துக் கூறுவோரை விட்டு விடுங்கள், அவர்கள் செய்து கொண்டிருந்தவைக் குரிய கூலியை கொடுக்கப்படுவார்கள்.(7,180)***

***வினா.*** மேற்கூறப்பட்ட வசனத்தை விளக்குக?

***விடை.*** அல்லாஹ்வுக்கு அழகான பெயர்கள் இருப்பதாக வும் அவைகளைக் கொண்டு பிரார்த்திக்குமாறும், அவை களைக் கொண்டு அவனை புகழுமாறும் கூறி, அவைக ளுக்கு தவறாக கூறப்படும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் தடுக்கின்றான். மேலும் அவ்வாறு கருத் துத் திரிப்பவர்களுக்கு மறுமையில் அவன் கடும் தண்டனை களை விதிப்பதாகவும் எச்சரிக்கின்றான்.

***வினா.*** இல்ஹாத் என்பதின் வறையறையைக் கூறி, அல் லாஹ்வின் பெயர்களில் இல்ஹாத் என்றால் என்னவென் பதையும் விளக்கி, அதன் வகைகளை உதாரணத்துடன் கூறுக.?

***விடை.*** இல்ஹாத் என்றால் குறிப்பான நோக்கத்தை விட் டுத் திரும்புதல் என்பதாகும். அல்லாஹ்வின் பெயர்களில் இல்ஹாத் என்றால், அப்பெயர்களுக்கு என்ன கருத்துக்

கொடுக்க வேண்டுமோ, அவ்வாறு கொடுக்காமல் தவறான கருத்துக்களை கொடுப்பதாகும். அவை பல வகைப்படும்.

- அப் பெயர் கொண்டு விக்ரகங்களை அழைத்தல்.
- அல்லாஹ்வுக்கு பொறுத்தமில்லாத பெயர் கொண்டு அவனை அழைத்தல்.
- தரக்குறைவான விடயங்களைக் கொண்டு அல் லாஹ்வை வர்ணித்தல்.
- அவனது பெயர்களுக்குரிய பொருள் கொடுக்காமல் மறுத்தல், அல்லது பிழையான கருத்துக் கொடுத்தல்.
- அவனது பண்புகளை, படைப்பினங்களின் பண்புக ளுடன் ஒப்பிடுதல் போன்றனவைகளாகும்.

***வினா.*** அல்லாஹ்வின் பெயர் பண்புகள் விடயத்தில், அஹ் லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் கொள்கை யாது?

***விடை.*** அல்லாஹ் எவ்வாறு தனக்கு பெயரிட்டுக் கொண் டானோ, நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு அவனது பெயர்களை குறிப்பிட்டார்களோ, அவ்வாரே எவ்வித ஒப்புவமையின்றி, திரித்துக்கூறல் இன்றி ஏற்றுக் கொள்வதாகும். அல்லாஹ் கூறுகின்றான். அவனைப்போன்று எப்பொருளும் இல்லை அவனே (யாவற்றையும்) செவியேற்க்கிறவன் பார்க்கிறவன். (42,11)

***வினா.*** அல்லாஹ்வின் திருநாமங்களில் சிலதை கூறுக?

***விடை.*** அர்ரஹ்மான், அர்ரஹீம், அஸ்ஸமீ:, அல்பஷீர், அல் அஸீஸ், அல்ஹகீம், அல் ஹலீம், அல் அலீம், அல் அலிய்யு, அல் கபீர், அல்ஹய்யு, அல் கய்யூம் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹ்வுக்கு தொன்னூற்றி ஒன்பது நாமங்கள் உள்ளன, யார் அவைகளை மனன மிட்டுக் கொள்கின்றார்களோ அவர் சுவனம் நுழைந்து விட்டார்.(புகாரி முஸ்லிம்)

***வினா.*** அல்லாஹ்வின் திருநாமங்களை நம்புவதற்குரிய நிபந்தனைகளைக் கூறுக?

***விடை.*** அவனது திருநாமங்களை நம்புவதற்குரிய நிபந்தனைகள் மூன்றாகும். அவை, அப்பெயர்களையும், அவைகள் அறிவிக்கும் பொருளையும், அவையோடு தொடர்புற்றிருப்பவைகளையும் நம்புவதாகும்.

***அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வின் (இத்தகைய) அருட் கொடையை அவர்கள் நன்றாக அறிகின்றனர், பின்னர் அதனை அவர்கள் நிராகரிக்கின்றனர் அவர்களில் பெரும்பாலோர் (நன்றி கெட்ட) காபிர்களாகவே இருக்கின்றனர். (16,83)***

***வினா.*** மேற் கூறப்பட்ட வசனத்தை விளக்குக?

***விடை.*** அல்லாஹ் மனிதனுக்கு அருளிய அருளை வேறொரு மனிதனோடு இணைத்துக் கூறுவதை இழிவு படுத்திக் கூறுகின்றான். அதாவது இது எனது தந்தை விட்டுச் சென்ற எனது சொத்து, அல்லது இவன் இல்லாமலிருந்தால், நாங்கள் என்னவாயிருப்போம். என்று கூறுவதைப் போல.

***அல்லாஹ் கூறுகின்றான். இது நமது இவ்வுலக வாழ்க்கையைத் தவிர வேறு(வாழ்க்கை) இல்லை, (இதில்தான்) நாம் இறந்து விடுகின்றோம், இன்னும் ஜீவிக்கிறோம், காலத்தைத் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். (45,24)***

***வினா.*** மேற் கூறப்பட்ட வசனத்தை விளக்குக?

***விடை.*** காபிர்களும் முஷ்ரிக்கீன்களும் உலக வாழ்க்கை தான் வாழ்க்கை, மறுமை என்பது கிடையாது, ஒரு சமுதா யத்தினர் மரணிக்க, மற்றொரு சமுதாயத்தினர் வாழ்வர் இது தான் இயற்கை, காலங்களின் சுழற்சியே மனிதர்களை மர ணிக்கச் செய்கின்றது என்று கூறி அல்லாஹ்வையும் அவன் கூறுகின்ற விடயங்களையும் மறுத்துரைத்து இஸ்லாத்தை விட்டும் தூரமாகியிருக்கின்றார்கள் என்பதனை தெளிவு படுத்துகின்றான்.

***வினா.*** காலத்தை தூற்றுவதின் சட்டம் என்ன?

***விடை.*** காலத்தை தூற்றுவது ஹராமாகும். ஏனெனில் அவ் வாறு காலத்தை தூற்றுவது, அல்லாஹ்வை தூற்றுவதும், அவனை துன்புறுத்துவதுமாகும். நபி (ஸல்) அவர்கள் நவின் றார்கள். அல்லாஹ் தஆலா கூறுகின்றான். ஆதத்தின் மகன் என்னை நோவினை செய்கின்றான், காலத்தை தூற்று கின்றான், நான் தான் காலத்தை இயக்குகின்றேன், நான் தான் இரவையும் பகலையும் மாற்றியமைக்கின்றேன். வேறொரு அறிவிப்பில். நீங்கள் காலத்தை தூற்றாதீர்கள் ஏனெனில் அல்லாஹ் தான் காலத்தை இயக்குகின்றான். காலத்தை தூற்றுபவனை இரு வகைப்படுத்தலாம்.

- அல்லாஹ்வுடன் காலமும் சேர்ந்து இயங்குகின்றது என நம்புகின்றவன், இவன் இணை வைத்தவனாவான்.
- அல்லாஹ் தான் அதனை இயக்குகின்றான் என நம் புகின்றவன் அவன் அல்லாஹ்வை தூற்றியவனாவான்.

***அல்லாஹ் கூறுகின்றான். (இதனைப் பற்றி) நீர் அவர்களைக் கேட்பீராயின் நாங்கள்(வீண்) பேச்சில் மூழ்கியும் விளையாடிக் கொண்டுமிருந்தோம் என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள். (அதற்கு நபியே!***

***அவர்களிடம்) அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனது தூதரையுமா நீங்கள் பரிகசித்துக் கொண்டிருந்தீர்கள். என்று நீர் கேட்பீராக. நீங்கள் (செய்யும் பரிகாசத்திற்கு வீண்) புகழ் கூற வேண்டாம், உங்களின் விசுவாசத்திற்குப் பின்னர் திட்டமாக (அதனை) நீங்கள் நிராகரித்தே விட்டீர்கள். (௯,௬௫,௬௬)***

***வினா.*** மேற் கூறப்பட்ட வசனத்தை விளக்குக?

***பதில்.*** முஹம்மதே உங்களையும், உங்கள் தோழர்களையும், பற்றி பரிகசித்த அந்த முனாபிக்கீன்களிடம், ஏன் இவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டால், நாங்கள் விளையாட்டுக்காக, நேரத்தை கழிப்பதற்காக, செய்தோம் என்று காரணம் கூறுவார்கள். அவர்களுக்கு கூறுங்கள், உங்கள் காரணங்கள் அல்லாஹ்வின் தண்டனையை விட்டும் உங்களைப் பாது காக்கமாட்டாது. அவ்வாறு செய்ததன் மூலம் நீங்கள் ஈமான் கொண்டதன் பின் காபிராகி விட்டீர்கள். என்று அல் லாஹ் விளக்கிக் கூறுகின்றான்.

***வினா.*** வழி பாட்டிலும் வணக்கத்திலுமுள்ள ஷிர்க்கின் வித் தியாசத்தைக் கூறுக?

***விடை.*** வழிபாட்டில் ஷிர்க் என்றால், அதனை குறிப்பாக சொல்வது கொண்டே ஏற்பட்டு விடும், அல்லாஹ் அல்லாத வரை வணங்க வேண்டிய அவசியம் கிடையாது. அல்லாஹ் கூறுகின்றான். அவ்விருவரும் இணையாளர்களை ஆக்கி னார்கள். (7,190)

***இப்னு ஹஸ்ம் அவர்கள் கூறுகின்றார்கள். அல் லாஹ் அல்லாத ஒன்றுடன் அடிமை என்ற வாசகத்தை சேர்க்கக் கூடாது என்று அறிஞர்கள் முடிவெடுத்துள் ளனர்.***

***வினா.*** மேற் கூறப்பட்ட கருத்தின் விளக்கமென்ன?

***விடை.*** அதாவது அல்லாஹ் அல்லாத பெயர்களுடன் அடிமை என்ற பெயரை சேர்ப்பது இணையில் ஒரு வகை யாகும். ஏனெனில் படைப்பினங்கள் அனைத்தும் அவனது அடிமைகளாகும், அவைகளுடன் அந்த வார்த்தையை உப யோகிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

***நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். அல்லாஹு வின் பெயர் கொண்டு சுவனத்தைத் தவிர வேறெத னையும் கேட்க வேண்டாம். (அபூ தாவுத்)***

***வினா.*** இக்கூற்றை விளக்கி அது கூறும் படிப்பினையைக் கூறுக?

***விடை.*** பிரார்த்திக்கக் கூடிய ஒருவன் பிரார்த்திக்கும் போது, அல்லாஹ்வைக் கொண்டு முக்கியமானவைகளான, மறு மைக்கு தேவையான விடயங்களையே கேட்க வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

அது கூறும் படிப்பினை

- அல்லாஹ்வின் திருமுகம் கொண்டு சுவனத்தை மாத்திரமே வேண்ட வேண்டும்.
- அல்லாஹ்வுக்கு இருக்க வேண்டிய முறையில் முகம் இருப்பதாக நம்பிக்கை கொள்ளல்.

***வினா.*** கத்ரைக் கொண்டு நம்பிக்கை கொள்வது எப்படி யென்பதனையும், அதன் படித்தரங்களையும் கூறுக?

***விடை.*** அல்லாஹ் எதனை நாடுகின்றானோ அது நடக்கும், அவன் நாடாதது நடக்க மாட்டாது, உலகில் நிகழும் அனைத்தும் அவனது நாட்டப்படியே நடக்கின்றன, உனக்கு ஏற்படும் நலவு உன்னை தவறிலைக்கவோ, உனக்கு ஏற்படும் தவறு உன்னை நலவு செய்ய வைக் கவோ அல்ல. அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக ஒவ் வொரு விஷயத்தையும் (பதிவு செய்து அவர்களுடைய)

குறிப்பேடுகளில் வைத்திருக்கின்றோம். அதன் படித்தரங்கள் நான்கு.

- உலக விடயங்களை படைக்க முன்பே, அல்லாஹ் அனைத்தையும் அறிந்து வைத்திருக்கின்றான் என நம்ப வேண்டும்.
- வானம் பூமிகளை படைக்க முன்பே, அவைகளை எழுதி விட்டான் என நம்ப வேண்டும்.
- படைக்கப்பட்ட அனைத்தும் அவனது நாட்டப் படியே படைக்கப்பட்டதென நம்ப வேண்டும்.
- அவைகளை படைத்து உருவாக்கியவன் அல்லாஹ் தான் என நம்ப வேண்டும்.

وأوفوا بعهد الله إذا عهدتم ولا تنقضوا الأيمن بعد توكيدها.

***வினா.*** மேற் கூறப்பட்ட வசனத்தை விளக்குக?

***விடை.*** அல்லாஹ் உடண் படிக்கைகளை நிறைவேற்றும் படியும் முறிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட உடண் படிக்கைகளை பாதுகாத்துக் கொள்ளும் படியும் ஏவுகின்றான்.

***வினா.*** மனிதனின் மரணத்திற்குப் பின் அவனுக்கு நடக்க விருப்பதைப் பற்றி ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** மனிதன் மரணித்ததன் பின் அவனை கப்ரில் வைக்கப்பட்டு, நல்லவனாக இருந்தால் அருளும், கெட்டவனாக இருந்தால் வேதனையும் செய்யப்படும். நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். கப்ரு ஒன்றோ சுவனத்தின் பூஞ்சோலையாக இருக்கும், அல்லது நரகின் படுகுழியாகயிருக்கும். பின்பு மறுமையில் கூலி கொடுப்பதற்காக எழுப்பப்படுவான். அல்லாஹ் கூறுகின்றான். (பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம், பின்னர் அதிலேயே நாம் உங்களை மீளவைப்போம், மற்றொரு தடவையும் (உங்களுக்கு உயிர் கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்து

வோம், (என்று அவனுக்குக் கூறும்படிச் செய்தோம்) (20,55) மேலும் கூறுகின்றான். மேலும் அல்லாஹ் உங்களை(ப் புற் பூண்டுகளைப் போல்) பூமியி(ன் மண்ணி)லிருந்து உற்பத்தி செய்வதாக உற்பத்தி செய்தான். பின்னர் அதில் உங்களை (மரணிக்கச் செய்து) அவன் மீளவைப்பான், மேலும் (அதிலி ருந்தே) உங்களை வெளிப்படுத்துவதாக அவன் வெளிப் படுத்துவான்.(71,17,18)

***வினா.*** மனிதனுக்கு கப்ரிலே நிகழுவது என்ன?

***விடை.*** மனிதனை கப்ரில் வைத்ததும், இரண்டு மலக்குகள் அவனிடம் வந்து, உனது இறைவன் யார்? உனது மார்க்கம் என்ன? உனக்கு அனுப்பப்பட்ட நபி யார்? போன்ற கேள்வி களை கேட்பார்கள். முஃமினானவன் எனது இறைவன் அல் லாஹ், எனது மார்க்கம் இஸ்லாம், முஹம்மத் நபி அவர்கள் அல்லாஹ்வின் அடிமையும் தூதருமாவார் என்று கூறுவான். இறை நிராகரிப்பாளன். ஹா ஹா எனக்குத் தெரியாது, எனக் குத் தெரியாது, மனிதர்கள் ஏதோ சொல்லிக் கொண்டிருந் தார்கள் அதையே நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். எனக் கூறுவான்.

***வினா.*** கப்ரிலே அடக்கப்பட்டவர்களுக்கு வேதனையோ, பாக்கியமோ கொடுக்கப்படுமா, ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** முஃமினானவனின் ரூஹுக்கும் உடம்புக்கும் பாக்கி யம் செய்யப்படும், காபிரானவனின் ரூஹுக்கும், உடம்புக் கும் வேதனை செய்யப்படும். சில வேளை முஸ்லிமான பாவி யும் வேதனை செய்யப்படுவான். நபி (ஸல்) அவர்கள் நவின் றார்கள். அவர்கள் இருவரும் வேதனை செய்யப்படுகின் றார்கள், அவர்கள் பெரும் பாவத்திற்காக வேதனை செய் யப்படவில்லை. ஒருவர் சிறுநீர் கழித்து விட்டு சுத்தம் செய் யாமல் இருந்தார். மற்றவர் கோல் சொல்லித் திரிந்தார் என் றார்கள். மேலும் அல்லாஹ் கூறுகின்றான். விசுவாசங்

கொண்டுள்ளார்களே அத்தகையோரை இம்மை வாழ்விலும் மறுமையிலும் (ஷஹாதத்துக் கலிமாவை கூறுவதன் மூலம்) உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் நிலைப்படுத் துகிறான்.(14,27) மேலும் கூறுகின்றான். ஆகவே அவர்கள் சூழ்ச்சி செய்ததின் தீமைகளை விட்டும் (ஈமானை மறைத் துக் கொண்டிருந்த) அவரை அல்லாஹ் பாதுகாத்துக் கொண்டான் மேலும் பிர்அவ்னைச் சார்ந்தோரை தீய வேதனை சூழ்ந்து கொண்டது. அந் (நரக) நெருப்பு அதன் மீது, காலையிலும் மாலையிலும் அவர்கள் எடுத்துக் காட் டப்படுகிறார்கள், மேலும் மறுமை நாள் நிலை பெற்று விடும் நாளில் பிர்அவ்னைச் சார்ந்தோரைக் கடினமான வேதனை யில் புகுத்துங்கள் (என மலக்குகளுக்குக் கூறப்படும்) (40.45,46)

***வினா.*** மறுமை நாளை விசுவாசம் கொள்வதின் சட்டத்தை ஆதாரத்துடன் கூறுக?

***விடை.*** மறுமை நாள் என்பது இறுதி நாளாகும், அந்த நாளில் தான் அனைத்து மக்களும் எழுப்பப்படுவார்கள். அதனை விசுவாசங் கொள்வது ஈமானின் முக்கிய கடமைகளிலுள்ள தாகும். அல்லாஹ் கூறுகின்றான். மறுமை நாள் நெருங்கி விட்டது (அது பற்றித் தெரிவிக்க) சந்திரனும் பிளந்து விட்டது. (54,1) மேலும் கூறுகின்றான். (மரணித்த பின்னர் நிச் சயமாக உயிர் கொடுத்து) அவர்கள் எழுப்பப்படவே மாட் டார்கள் என்று நிராகரிப்போர் எண்ணிக் கொண்டிருக்கின் றனர், (நபியே) நீர் கூறுவீராக! அவ்வாறல்ல என் இரட்சகன் மீது சத்தியமாக நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள், பின்னர் நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப் பற்றி நிச்சயமாக நீங்கள் அறிவிக்கப்படுவீர்கள், மேலும் அ(வ் வாறு செய்வ)து அல்லாஹ்வுக்கு மிக்க புகழுக்குரியது. (64,7) மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். நானும் மறு

மையும் இவ்வாறு படைக்கப்பட்டிருக்கின்றோம் என தனது இரு விரல்களை ஒன்றிணைத்துக் காட்டினார்கள். (புகாரி முஸ்லிம்)

***வினா.*** மனிதர்கள் கப்ருகளிலிருந்து எவ்வாறு எழுப்பப் படுவார்கள்.?

***விடை.*** பூமியிலிருந்து புற்கள் எவ்வாறு வெளியாகின்றதோ, அவ்வாறே ஆடையற்றவர்களாக, பாதணியற்றவர்களாக எழுப்பப்பட்டு, மஹ்ஷர் மைதானத்துக்கு கொண்டு செல் லப்பட்டு, அல்லாஹ்வின் முன்னிலையில் நிறுத்தப்படுவார் கள். அல்லாஹ் கூறுகின்றான். (மனிதர்களே) அந்நாளில் நீங் கள் (உங்கள் இரட்சகன் முன்) எடுத்துக் காட்டப்படுவீர்கள் உங்களிலிருந்து மறையக் கூடியது எதுவும் (அவனுக்கு) மறைந்து விடாது. (69,18) பின்பு விசாரிக்கப்பட்டு, அவர்க ளது செயல்களை காண்பிக்கப்படும். அல்லாஹ் கூறுகின் றான். அவர்கள் அனைவரையும் அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்பும் நாளில் அவர்கள் செய்தவற்றை அவர் களுக்கு அவன் அறிவிப்பான், அல்லாஹ் (அவர்கள் செய்த) அவற்றைக் கணக்கிட்டு வைத்துள்ளான் (58,6) பின்பு அவர் களது செயல்களை நிறுக்கப்படும். அல்லாஹ் கூறுகின் றான். மேலும் மறுமை நாளில் நீதமான தராசுகளை நாம் வைப்போம், எந்த ஓர் ஆத்மாவும் (எதனையும் குறைத்தோ கூட்டியோ) சிறிதளவும் அநியாயம் செய்யப்பட மாட்டாது, (நன்மையோ தீமையோ) ஒரு கடுகின் வித்தளவு அது இருந்த போதிலும், அதனையும் (நிறுக்கக்) கொண்டு வரு வோம், கணக் கெடுப்பவர்களில் (நமக்கு) நாமே போதும், (கணக்கெடுக்க மற்றவரின் உதவி நமக்குத் தேவை யில்லை.) (21,47) அப்போது அனைவரும் தத்தமது பட்டோ லைகளை வாசிப்பார்கள். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே எவர் தன்னுடைய பதிவுப்புத்தகத்தை வலக்கையில்

கொடுக்கப்பட்டாரோ, அவர் (மற்றவர்களிடம்) வாருங்கள் என்னுடைய பதிவுப் புத்தகத்தை நீங்கள் படித்துப் பாருங்கள் என்று (மகிழ்ச்சியுடன்) கூறுவார். (69,19) அதன் பின்பு நரகிற்கு மத்தியில் இருக்கும் ஸிராத் எனும் பாலத்தில் கடப்பார்கள், யார் அதனை கடந்து விடுகின்றாரோ அவர் ஈடேற்றமடைந்து விட்டார். நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். நரகின் இரு மறுங்கிலும் சிராத் என்னும் பாலம் அமைக்கப்படும். அதிலே முதன் முதலாக நானும் எனது சமுதாயமுமே கடந்து செல்வோம். கடந்து சென்ற மு∴மீன்கள், தாம் உலகில் செய்த அநியாயத்திற்காக பழிக்குப்பழி வாங்கிக் கொள்வார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். மு∴மீன்கள் நரகை கடந்து சென்றால், சுவனத்திற்கும், நரகிற்கும் இடையிலுள்ள பாலத்தில் வைத்து நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு மத்தியில் செய்து கொண்ட அநியாயத்துக்காக பழிக்குப்பழி வாங்கிக் கொள்வார்கள். அவர்கள் அதிலிருந்து தூய்மையடைந்து விட்டால், சுவனத்தில் நுழைய அனுமதி வழங்கப்படும்.(புகாரி)

***வினா.*** சூர் ஊதுவதைப் பற்றிக் கூறி, எத்தனை முறை அது ஊதப்படும் என்பதனையும் விளக்குக?

***விடை.*** சூர் மூன்று முறை ஊதப்படும்.

- திடுக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சூர் ஊதப்ப டும். அதன் மூலம் இந்த உலகமே சின்னாபின்னப்பட்டு, சீர் குழைந்து விடும். அல்லாஹ் கூறுகின்றான். சூர் (குழல்) ஊதப்படும் நாளில் அல்லாஹ் (காப்பாற்ற) நாடி யவர்களைத் தவிர வானங்களிலுள்ளவர்களும், பூமியி லுள்ளவர்களும், திடுக்கிட்டு விடுவார்கள், ஒவ்வொருவ ரும் பணிந்தவர்களாக அவனிடம் வந்து விடுவர்.(27,87)

- உலகிலுள்ள அனைத்தும் அழிக்கப்படுவதற்காக சூர் ஊதப்படும். அல்லாஹ் கூறுகின்றான். மேலும் சூர் (குழல்) ஊதப்படும், பின்னர் வானங்களில் இருப்பவர்க ளும், பூமியில் இருப்பவர்களும், அல்லாஹ் நாடியவர்க ளைத் தவிர மூர்ச்சித்து (ச்சித்தமிழந்து விழுந்து) விடு வார்கள்.(39,68)
- மரணித்தவர்களை எழுப்புவதற்காக சூர் ஊதப்ப டும். அல்லாஹ் கூறுகின்றான். பிறகு அதில் மறுமுறை ஊதப்படும் அப்போது அவர்கள் (அல்லாஹ்வின் கட்ட ளைகளை எதிர்) பார்ப்பவர்களாக(யாவரும் உயிர் பெற்று) எழுந்து நிற்பார்கள்.(39,68)

***வினா.*** சுவனம் நரகைப் பற்றி விளக்குக?

***விடை.*** சுவனம் நரகம் என்பது அல்லாஹ் தனது அடியார்க ளுக்கு அவர்கள் செய்த செயல்களின் பிரகாரம் கூலி கொடுப்பதற்காக ஏற்படுத்திய நிலையான இரு வீடுகளா கும். சுவனம் அல்லாஹ்வை நம்பி, நற்கிரியைகள் செய்த நல்லடியார்களுக்கு தயார் செய்யப்பட்ட வீடாகும், அதிலே கண்கள் கண்டிராத, காதுகள் கேட்டிராத, சுக போகங்கள் நிறைந்திருக்கின்றன. முக்கியமாக அதனைப் பெற்றுக் கொள்பவர்கள் அல்லாஹ்வின் திருமுகத்தைக் காணும் வாய்ப்பையும் பெறுவார்கள். அல்லாஹ் கூறுகின்றான். நிச்ச யமாக விசுவாசங் கொண்டு, நற்செயல்களையும் செய்கின் றார்களே, அத்தகையோர்தாம் படைப்புகளில் மிகச் சிறந் தவர்கள். அவர்களுடைய (நற்) கூலி அவர்களின் இரட்சகனி டம் (அத்னு எனும்) நிலையான சுவனங்களாகும், அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும், என்றென்றும் (அவர் கள்) அவற்றில் நிரந்தரமாக(த்தங்கி) இருப்பவர்கள், அல் லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான், அவர்

களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டார்கள், அது எவர் தன் இரட்சகனுக்குப் பயப்படுகிறாரோ அவருக்குரிய தாகும்.(98.7,8) மேலும் கூறுகின்றான். அந்நாளில் சில(ரு டைய) முகங்கள் (சந்தோசத்தால்) மலர்ச்சியானவையாக இருக்கும். (அவை) தங்கள் இரட்சகனை நோக்கிக் கொண்டிருக்கும். (75.22,23) மேலும் நரகத்தை இறை நிரா கரிப்பாளர்களுக்கு அவன் தயார் படுத்தி வைத்திருக்கின் றான். அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் (நரக) நெருப்பிற் குப் பயந்து கொள்ளுங்கள், அது எத்தகையதென்றால், (இரட்சகனுடைய இக்கட்டளையை) நிராகரிப்போருக்கா கத் தயார் படுத்தப்பட்டுள்ளது.(3,131) மேலும் நரகிலே பல தரப்பட்ட வேதனைகள் இருக்கின்றன. அல்லாஹ் கூறுகின் றான். (ஆனால் இதை நிராகரிக்கும்) அநியாயக்காரர்க ளுக்கு நிச்சயமாக நாம் நரகத்தை தயார் படுத்தி உள்ளோம், அந்நரகத்தின் சுவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு விட்டது, அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடி னால், சூட்டின் உச்சத்தை அடைந்த பழுக்கக்காய்ச்சப் பட்டதைப் போன்ற தண்ணீரைக் கொண்டே அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள், அது அவர்களுடைய முகங்களைச் சுட்டுக் கறுக்கி விடும்(அன்றி) அது மிக்க கெட்டபானமா கும், அவர்கள் இளைப்பாற இறங்குமிடத்திலும் அது மிகக் கெட்டதாகும்.(18,29)

***வினா.*** ஈஸா என்பவர் யார்?

***விடை.*** அவர் அல்லாஹ்வினால் தந்தையின்றி (உண்டாகுக) என்ற வார்த்தையின் மூலம் படைக்கப்பட்ட அவனது அடி மையும் தூதருமாவார். அவரை அல்லாஹ் வானத்தின் பால் உயர்த்தி வைத்திருக்கின்றான். மறுமை நெருங்கும் பட்சத் தில் இறங்கி, முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைக் கொண்டு தீர்ப்பு வழங்குவார். அல்லாஹ் கூறுகின்றான். நிச்

சயமாக அல்லாஹ்விடம் ஈஸாவுக்கு உதாரணம் ஆதமுடைய உதாரணத்தைப் போன்றதே, அவன் அவரை மண்ணால் படைத்துப் பின் அதற்கு (மனிதனாக) ஆகுக என்று கூறினான் அவர் (அவ்வாறு) ஆகிவிட்டார்.(3,59)

***வினா.*** நபியவர்களின் பெயரில் மௌலீத் கொண்டாடுவதினதும், மி∴ராஜுடைய இரவைக் கொண்டாடுவதினதும் சட்டத்தைக் கூறுக?

***விடை.*** இவ்வாறான கொண்டாட்டங்கள் இஸ்லாத்தில் இல்லாத புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத்துக்களாகும். எனவே மு∴மீனானவன் அல்லாஹ் மார்க்கமாக்கியவைகளை மாத்திரமே செய்ய வேண்டும். ஆனால் மேற் கூறப்பட்ட கொண்டாட்டங்கள் அல்லாஹ்வால் மார்க்கமாக்கப்பட்டவைகளல்ல.

***வினா.*** அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் சில பண்புகளைக் கூறுக?

***விடை.*** அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர்கள் மனித சமதாயத்துக்கு இறுதியாக அனுப்பப்பட்ட தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றி அல்லாஹ்வினதும், அவரினதும் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி, தொழுகை, ஸகாத், நோன்பு, போன்ற அவனது கட்டளைகளையும், அது தவிர்ந்த இதர கட்டளைகளையும், சிறம் பட நிறைவேற்றி, நல்லதை ஏவி, தீயதை தடுத்து, முஸ்லீம்களை விரும்பி, காபிர்களை எதிர்த்து, அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்து, அதிலே ஏற்படும் கஷ்டங்களைப் பொறுத்து, அல்லாஹ்வின் பாதையில் போர் செய்தும் இஸ்லாத்திலுள்ள இதர கடமைகளையும் நிறைவேற்றி வருவார்கள்.

***வினா.*** மார்க்கத்தை அறிந்து கொள்வதின் சட்டத்தையும், பிக்ஹுல் அக்பர் என்றால் என்னவென்பதையும் விளக்குக?

***விடை.*** மார்க்கத்தை அறிந்து கொள்வதென்றால், அதனை சிறந்த முறையில் கற்றுணர்ந்து அது கூறும் நல்லவை கெட்டவைகளையும் அறிந்து கொள்வதாகும். இவ்வாறு அறிந்து கொள்வது முஸ்லிமான அடியான் மீது கட்டாயக் கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான். இன்னும் மனிதர்களில் அல்லாஹ்வை நாங்கள் விசுவாசம் கொண்டுள்ளோம் என்று கூறுகின்ற சிலர் இருக்கின்றனர், ஆகவே அவர்கள் அல்லாஹ்வுடைய வழியில் துன்புறுத்தப்பட்டால் மனிதர்களால் ஏற்படும் (அத்) துன்பத்தை அல்லாஹ்வுடைய வேதனையைப் போலாக்கி (உங்களிடமிருந்து விலகி)க் கொள்கின்றனர். (௨௯,10) மேலும் பிக்ஹுல் அக்பர் என்றால், அல்லாஹ்வையும், அவனது தூதரையும் அறிந்து கொள்வதுடன், எங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை, மார்க்கம் சொன்ன படி ஏற்று, அது விலக்கியவைகளை தவிர்ந்து நடப்பதற்கு தங்களை பழக்கிக் கொள்வதாகும்.

***வினா.*** முஸ்லிமானவன் ஏன் சில துன்பங்களைக் கொண்டு சோதிக்கப்படுகின்றான்.

***விடை.*** ஒரு முஸ்லிம் சில துன்பங்களைக் கொண்டு சோதிக்கப்படுவானேயானால், அதில் பல காரணங்கள் இருக்கும். அக்காரணங்களிலுள்ளவை தான், அல்லாஹ் கூறும் பின்வரும் வசனம். உங்களில் எவர் செயலால் மிக்க அழகானவர் என்று உங்களை அவன் சோதிப்பதற்காக (மரணத்தையும், ஜீவியத்தையும் அவன் படைத்திருக்கின்றான்.) (67,௨) மேலும் மனிதன் துன்பத்தை எதிர் நோக்கும் போது எந்தளவு அதனை அல்லாஹ்வுக்காக பொறுத்துக் கொள்கின்றான் என்பதை அறிந்து கொள்வதற்குமாகும். அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக உங்களுடைய செல்வங்களும், உங்களுடைய பிள்ளைகளும், (உங்களுக்கு) ஒரு சோதனையேயாகும், அல்லாஹ் அவனிடமே மகத்தான கூலி

இருக்கின்றது. (64,15) எனவே ஒரு முஸ்லிம் தனக்கு ஏற்படும் மார்க்கப் பிரச்சினையில் தான் நினைத்தவாறு அதில் தலையிட்டு சட்டங்களை இயற்றிக் கொள்ளாமல், அதற்குரிய தீர்வுகளை அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

***வினா.*** ஒரு முஸ்லிம் மார்க்கத்தில் தனக்கு தெரியாத விடயங்களை கேட்டுத் தெரிந்து கொள்வதின் சட்டமென்ன?

***விடை.*** அவ்வாறு கேட்டுத் தெரிந்து கொள்வது கட்டாயக் கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே (இவர்களிடம் நீர் கூறுவீராக இதனை) நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (வேதத்தை) அறிந்தோரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.(21,7) மேலும் கூறுகின்றான். வேதம் கொடுக்கப் பட்டவர்களிடம் (உங்களுக்குக் கொடுக்கப்பட்ட) வேதத்தை மறைத்து விடாது, ஜனங்களுக்குத் தெளிவாக நீங்கள் எடுத்துரைக்க வேண்டும் என்று அல்லாஹ் உறுதி மொழி வாங்கியதை (நபியே நீர் அவர்களுக்கு நினைவு படுத்துவீராக!) (3,187)

***வினா.*** உலகில் பல இயக்கங்கள் உருவாகி, அவை ஒவ்வொன்றும் தத்தமது கொள்கையே சரியென வாதிடுகின்றன அவைகளில் எது சரியானது?

***விடை.*** உண்மையான கூட்டத்தினர் எப்போதும் குர்ஆன், ஹதீதை பின்பற்றி அதன் பக்கம் மக்களை அழைக்கக் கூடியவர்களாகும்.

***வினா.*** வேண்டுமென்றே தொழுகையை விடுபவனின் சட்டம் யாது?

***விடை.*** வேண்டுமென்றே தொழுகையை விடுபவன் இறை நிராகரிப்பாளனாவான். அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே அவர்கள் (தங்கள் பாவங்களிலிருந்து விலகிப்) பச்சாதாபப் பட்டு, தொழுகையையும் நிறைவேற்றி, ஸக்காத்தையும்

கொடுத்து வந்தால் அப்பொழுது (அவர்கள்) உங்களுக்கு மார்க்கத்தில் சகோதரர்களாவர்.(9,11) மேலும் கூறுகின்றான். பின்னர் அவர்கள் (தங்கள் பாவங்களுக்கு) பச்சாதாபப்பட்டு விலகி (விசுவாசித்துத்) தொழுகையையும் நிறைவேற்றி, ஸக்காத்தையும் கொடுத்து வந்தால், அவர்கள் வழியில் (அவர்களை) விட்டு விடுங்கள். (9,5) மேலும் கூறுகின்றான். உங்களை ஸகர் எனும் நரகத்தில் புகுத்தியது எதுவென கேட்கப்பட்டால்? அ(தற்க)வர்கள் தொழக் கூடியவர்களில் (உள்ளவர்களாக) நாங்கள் இருக்கவில்லை என்று கூறுவார் கள்.(74.42,43)

***வினா.*** முஸ்லிமான பெண் பர்தா அணிவதின் சட்டம் யாது?

***விடை.*** இஸ்லாமிய பெண்கள் பர்தா அணிவது, தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வது மட்டுமல்லாமல், அவர்கள் இஸ்லாம் கூறும் கடமையையும் நிறைவேற்றியவர்களாக ஆகிவிடுகின்றார்கள். இஸ்லாத்தில் பர்தா என்றால், ஒரு பெண் தனது அழகலங்காரங்களை அந்நிய மக்கள் பார்க் காத முறையில் மறைத்துக் கொள்வதற்குக் கூறப்படும்.

***வினா.*** மஹ்தி (அலை) அவர்கள் தோன்றுவார்கள் என்று கூறுபவனின் கருத்து சரிதானா?

***விடை.*** ஆம் அது சரியான கருத்தாகும், நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். அஹ்லுல் பைத்திலிருந்து எனது பெயர் கொண்ட ஒருவர் வரும் வரைக்கும் மறுமை உண்டாக மாட் டாது.(அஹ்மத்) வேறொரு அறிவிப்பில். உலகில் அநியாயம் நிறைந்து, பின்பு எனது வம்சத்திலிருந்து ஒருவர் தோன்றி நேர்மையையும், நீதத்தையும் பரப்பும் வரைக்கும், மறுமை உண்டாக மாட்டாது.

***வினா.*** இஸ்லாத்தில் நேசம் என்றால் என்னவென்பதை யும், ஏகத்துவத்துடன் அதற்குள்ள தொடர்பையும் கூறுக?

***விடை.*** நேசம் என்பது, இயற்கையில் உருவாகி, அல்லாஹ் வின் ஏட்பாட்டினால் அதிகரிக்கும், அதில் மிகவும் சிறந்தது அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நேசம் வைப்பதா கும். அது ஏகத்துவத்தின் அடிப்படையிலுள்ளதுமாகும். அல்லாஹ் கூறுகின்றான். (நபியே மனிதர்களிடம்) நீர் கூறு வீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந் தால், என்னை நீங்கள் பின்பற்றுங்கள். (அவ்வாறு நீங்கள் செய்தால்) உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும், உங்களுக்காக அவன் மன்னித்து விடு வான்.(3,31) மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். உங்க ளில் எவரும், தன் பெற்றோரையும், தன் பிள்ளைகளையும், ஏனைய மனிதர்களையும் விட என்னை விரும்பாதவரை உண் மையான மு.:மினாக மாட்டான்.(புகாரி) வேறொரு அறிவிப் பில். ஒரு மனிதன் தன்னை விட என்னை விரும்பாத வரை உண்மையான மு.:மினாக மாட்டான். அவ்வாறு நேசம் கொள்வதின் மூலமே ஒரு மு.:மின் ஈமானின் இன்பத்தை உணர்கின்றான். ஒருவன் தனது மனைவியையோ, பிள்ளை களையோ, விரும்புவதில் தவறில்லை, என்றாலும் அல் லாஹ்வையும், ரஸூலையும் விரும்புவதை விட்டும், அவை அவனை தடுத்து விடக் கூடாது.

***வினா.*** கிப்லாவாசிகள் எனப்படுவோர் யாவர்?

***விடை.*** கிப்லாவாசிகள் என்போர், தான் ஒரு முஸ்லிம் எனக் கூறிக் கொண்டு, கிப்லாவை பின்பற்றுபவர்கள் அனைவரு மாகும். நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். யார் தொழுது எமது கிப்லாவை முன்னோக்குகின்றாரோ, அவர் முஸ்லிமா வார், அவருக்கு கடமையாக்கப்பட்டது எமக்கும், எமக்கு கடமையாக்கப்பட்டது அவர்களுக்கும் கடமையாகும்.

***வினா.*** ஒரு பாவி தனது பாவத்தின் மூலம் ஈமானிலிருந்து வெளியாகி விடுவானா?

***விடை.*** அவன் செய்யும் பாவம் இணையாக இருந்தால் இஸ் லாத்திலிருந்து வெளியேறி விடுவான். அவன் செய்யக் கூடி யது சிறிய பாவமாக இருந்தால், அவன் ஈமானுள்ளவனாக இருப்பதுடன், அவனது பாவத்தின் பிரகாரம் அவனது ஈமான் குறைந்து விடும். நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். விபச்சாரி விபச்சாரம் செய்யும் போது, விசுவாசியாக இருக்க மாட்டான். அதாவது பூரண ஈமானுள்ள விசுவாசி யாக இருக்க மாட்டான்.

***வினா.*** சஹாபி என்றால் யார், அவர் மீது எங்கள் கடமை யாது?

***விடை.*** சஹாபி என்பவர் நபி (ஸல்) அவர்களை சந்தித்து, அவரை விசுவாசித்து, அவ்வாறே மரணித்தவராவார். அவர் களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை, அவர்களை நேசித்து, சங்கைப்படுத்தி, அவர்கள் எல்லா விடயங்களி லும் நீதமானவர்கள் எனக் கூறி அவர்களைத் தூற்றாமல் பொருந்திக் கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்கள் நவின் றார்கள். எனது தோழர்களை தூற்றாதீர்கள், எவனிடம் எனது உயிர் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, நீங் கள் உஹத் மலையளவு தங்கத்தை அல்லாஹ்வின் பாதை யில் செலவு செய்தாலும் கூட, அவர்கள் செய்த தியாகங்க ளில் சிறு பிரமானத்தைக் கூட பெற்றுக் கொள்ள மாட்டீர் கள்.(புகாரி முஸ்லிம்)

***வினா***. மனிதன் தனது பாவத்தை விட்டும், இணையை விட்டும் எவ்வாறு பாவ மன்னிப்புத் தேட வேண்டும்.

***விடை.*** முதலாவதாக ஷஹாதாக் கலிமாவை மொழிந்து, பின் குளித்து, தான் செய்த பாவத்தை நினைத்து வருந்தி, இதன் பிறகு அந்த பாவத்தை செய்ய மாட்டேன் என உறுதி கொண்டு, அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேட வேண் டும். அல்லாஹ் கூறுகின்றான். (நபியே! நிராகரிப்போருக்கு

நீர் கூறுவீராக! (இனியேனும் ) அவர்கள் (விஷமம் செய்யாது) விலகிக் கொண்டால், திட்டமாக சென்று விட்ட (முந்திய) குற்றங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்.(8,38) உண்மை யான விசுவாசி, தான் செய்த பாவங்கள் அனைத்துக்கும், அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவான். அல்லாஹ் கூறுகின்றான். விசுவாசிகளே கலப்பற்ற தவ்பாவாக (தூய மனதுடன் பாவத்திலிருந்து விலகி) அல்லாஹ்வின் பால் நீங்கள் தவ்பாச் செய்யுங்கள்.(66,8) மேலும் நபி (ஸல்) அவர் கள் நவின்றார்கள். உங்களுக்கு சிறு பாவங்களை எச்சரிக் கின்றேன், அவைகள் அனைத்தும் ஒன்றிணைந்து அவனை அழித்து விடுகின்றன.(அஹ்மத்)

***வினா.*** 2001ஆம் ஆண்டில் உலகம் முடிவடையும் என்ற கருத்தினதும், 1000 ஆண்டு விழாக்களை கொண்டாடுவதி னது சட்டத்தினையும் கூறுக?

***விடை.*** மறுமை தோன்றுவதைப் பற்றிய அறிவு அல்லாஹ்வி டம் மாத்திரமே உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான். (நபியே) மறுமை நாளைப்பற்றி (அது எப்பொழுது என்று) உம்மிடம் மனிதர்கள் கேட்கின்றனர் (அதற்கு) நீர் கூறும் (அது எப் பொழுது என்ற) அதன் அறிவெல்லாம் அல்லாஹ்விடம் (மட்டும்) தான் இருக்கின்றது. மேலும் மறுமை நாள் சமீ பத்தில் வந்து விடக் கூடும் என உமக்கு எது அறிவித்துக் கொடுக்கும்?(33,63) மேலும் கூறுகின்றான். (நபியே) மறுமை நாள் பற்றி, அதனுடைய வருகை எப்பொழுது என அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள், (அதற்கு) நீர் கூறுவீராக அதன் அறிவெல்லாம் என் இரட்சகனிடத்தில்தான், அதை (வர வேண்டிய) அதற்குரிய நேரத்தில் அவனையன்றி வேறு எவ ரும் வெளிப்படுத்தமாட்டார், (அதுபற்றி முற்றிலும் அறிந்த வன் அவனே, அது சமயம்) வானங்களிலும் , பூமியிலும் பளு (வான சம்பவங்கள்) ஏற்பட்டு விடும், திடீரெனவே தவிர அது

உங்களிடம் வராது.(7,187) எனவே உலகத்தின் கால வரைய றையைக் கொண்டோ, சில மணித்தியாளங்கள், இரண்டா யிரம் வருடங்கள் போன்றவைகளைக் கொண்டோ வரைய றுக்க முடியாது. மேலும் இரண்டாயிரம் ஆண்டை முன்னிட்டு முஸ்லிம்கள் விழாக் கொண்டாடுவது கூடாது, ஏனெனில் அவ்வாறு செய்வது யூத கிரிஸ்தவர்களின் பழக்கங்களிலுள் ளதாகும். எனவே முஸ்லிம்கள் அவைகளுக்கு முக்கியத்து வம் கொடுக்காமல், அவர்களது கெட்ட செயற்பாடுகளை விட்டு விட்டு, அவர்களுக்கு எவ்விதத்திலும் ஒப்பாகாமலும், அவ்விழாக்களை முன்னிட்டு வாழ்த்து தெரிவிக்காமலும், குர்ஆன் ஹதீதை பின்பற்றி, இஸ்லாத்தை கண்ணியமான தாக நினைத்து அதன் பக்கம் மக்களை அழைக்க முயற்சி செய்ய வேண்டும்.

***வினா.*** ஷைத்தான் முஃமீன்களின் உள்ளங்களில் ஏற்படுத் தும் சந்தேகங்களை நீக்கிக் கொள்ளும் வழிமுறை யாது?

***விடை.*** அதை வெறுத்து, பொறுமையாயிருந்து அல்லாஹ்வி டம் பாதுகாப்பு தேடிக் கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர் கள் நவின்றார்கள். ஷைத்தான் உங்களிடம் வந்து இதனை யார் படைத்தது? என சில சந்தேகங்களை ஏற்படுத்தி கடைசியில் அல்லாஹ்வை யார் படைத்தது? என்ற சந்தே கத்தை ஏற்படுத்துவான், அந்நிலைக்கு அவன் வந்து விட் டால், அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடி, அதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.(புகாரி முஸ்லிம்) மேலும் அறிவிக் கின்றார்கள். சில நபித் தோழர்கள் ரஸூல் (ஸல்) அவர்க ளிடம் வந்து, எங்களது உள்ளங்களில் சில கேட்க முடியாத கேள்விகள் எழும்புகின்றன எனக் கூறினார்கள். அதற்கவர் கள். அவ்வாறு பெற்றுக் கொள்கின்றீர்களா? என வினவ, அவர்களும் ஆம் என்றார்கள். அதற்கவர்கள் அதுவே உங்க ளிடத்தில் ஈமான் இருக்கின்றதென்பதை தெளிவு படுத்து

கின்றது.(முஸ்லிம்) எனவே முஸ்லிம்களுக்கு அவ்வாறான சந்தேகங்கள் வந்து விட்டால், அவைகளை விட்டு விட வேண்டும். நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். அல்லாஹ் எனது சமுதாயத்தினரில் ஏற்படும் சந்தேகங்களை அவர்கள் அதனை செயல் படுத்தாமலிருக்கும் போதும், அதைப் பற்றி கதைக்காமலிருக்கும் போதும், அதற்கு தண்டனையளிக்க மாட்டான்.(புகாரி முஸ்லிம்)

***வினா.*** அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினர்களின் ஏகத் துவக் கொள்கை அடிப்படை யாது?

***விடை.*** அவர்கள் தெளிவான பாதையிலே சென்று, அதனை நடை முறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்க ளின் கொள்கைகள் பின்வருமாறு.

- அவர்கள் அல்லாஹ்வையும், அவனது மலக்குமார்க ளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்க ளையும், மறுமை நாளையும், நல்லவை கெட்டவை அனைத்தும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரமே நடக்கின்றதென்பதையும் நம்புவார்கள்.
- ஈமான் என்பது சொல்லும், செயலும், நம்பிக்கையு மாகும், அல்லாஹ்வுக்கு வழிப்படுவதின் மூலம் அதிக ரிக்கவும், பாவம் செய்வதின் மூலம் குறையவும் செய்யும் என்ற நம்பிக்கையுடையவர்கள்.
- அவர்கள் முஸ்லிம்களில் எவரையும், ஷிர்கான விட யங்களைக் கொண்டே தவிர காபிர் எனக் கூற மாட்டார்கள்.
- முஸ்லிம்களின் தலைவர் பாவங்களைக் கொண்டு ஏவாமல் இருக்கும் காலமெல்லாம் அவருக்கு வழிப்படுவார்கள்.

- முஸ்லிம்களின் தலைவர் ஷிர்க் அல்லாத விடயங்களை செய்யும் போது, அவர்களுக்கு எதிராக போர் தொடுக்க மாட்டார்கள்.
- நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் விடயத்தில், தமது நாவுகளையும் உள்ளங்களையும் பாதுகாத்துக் கொள்வார்கள்.
- நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினரை விரும்பி, அவர்களை தலைவர்களாகவும் ஏற்றுக் கொள்வார்கள்.
- அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கு கொடுக்கப் பட்ட கராமத்துக்களை உண்மைப்படுத்துவார்கள்.
- அல் குர்ஆன் அல் ஹதீத் கூறக்கூடிய விடயங்களில் அந்நல்லடியார்களை பின்பற்றி, நபித் தோழர்கள் செய்து வந்ததையும் பின்பற்றுவதற்கு ஆதாரமாக எடுத் துக் கொள்வார்கள்.

அத்துடன் அவர்கள் நற்குணங்களுடனும், நல்லதை ஏவி தீயதை தடுத்தும், இஸ்லாத்தின் அரண்களை பாது காத்தும், நல்லவைகளையும், தக்வாவையும் கொண்டு உபதேசம் செய்தும், பெற்றோர்களை கண்ணியப்படுத்தி, குடும்பத்தினரை சேர்ந்து நடந்தும், இது போன்ற ஏனைய இஸ்லாம் ஏவிய விடயங்களையும் செய்து வருவார்கள். எனவே எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவரையும் அவர் களிலுள்ளவர்களாகவும், அல்குர்ஆன் அல் ஹதீத் அடிப்ப டையில் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் ஆக்கியருள்வானாக.

وصلى الله تعالى وسلم على نبينا محمد وآله وصحبه وسلم.